Registered as a News Paper  பக்கங்கள்: 08  விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2023  தை 24  (07-02-1992)  வெள்ளிக்கிழமை  ஓசை: 354

## மூன்றாவது தொகுதி அகதிகள் புறப்பாடு

இலங்கைத் தமிழ் அகதிகளில் அறுநூற்றிஐம்பத்தெட்டுப் பேர் கொண்ட மூன்றாவது அணியினர் நேற்றுச் சென்னையிலிருந்து புறப்பட்டனர். இவர்கள் நாளை திருக்கோணமலையைச் சென்றடைவர். சுமார் இருநூற்றி அறுபத்தெட்டு குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் நெல்லை, கட்டப் பொம்மன், மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களிலிருந்து சென்னைக்குஅழைத்துவரப்பட்டு அங்கிருந்துகப்பல்மூலம் அனுப்பி (8 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று காவலரண்கள் அழிப்பு

# அதிகாரி உட்பட 5 படையினர் பலி

## வவுனியாவில் புலிகளின் துணிகர தாக்குதல்

(வவுனியா)

வவுனியா - நொச்சிமோட்டையில் சிறிலங்கா இராணுவக் காவல் அரண்கள் மூன்றை விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் தாக்கி அழித்தனர். இத்துணிகர அதிரடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மூவர் படுகாயமடைந்தனர். ஏனையோர் காவலரணைவிட்டு ஓடிவிட்டனர். இத்தாக்குதலின்போது பல நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவை அடைந்தனர்.

வவுனியா மாவட்டம் நொச்சி மோட்டையில் தொடராக அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவல் அரண்கள் மீதே விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற் (8 ஆம் பக்கம் பார்க்க)

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நொச்சிமோட்டை காவலரண்கள் மீதான தாக்குதலில்விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்;

- ★ வி.கே. ரக இலகு இயந்திரத் துப்பாக்கி -01
- ★ ரி-56-01 ரக துப்பாக்கிகள் -03
- ★ ரி-56-02 ரக துப்பாக்கி -01
- ★ வி.கே ரக துப்பாக்கிக்குரிய பைபோட் -01
- ★ மேலதிக சுடுகுழல் -01
- ★ தொடர் ரவைகள் -752
- ★ ரவைகள் -2663
- ★ ரி-56 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள் -07
- ★ நடுத்தர ரவைகள் .888
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -05

### வீரச்சாவு

**லெப்.ஐயனார், வினோதன்**

நொச்சிமோட்டை காவலரண் தகர்ப்பின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் லெப். (8 ஆம் பக்கம் பார்க்க)



பருத்தித்துறை, நெல்லியடி பிரதேசங்களுக்கான காவல்துறை பணிமனை திறப்பு விழா நிகழ்வாக கடந்த நாலாம் திகதி கடற்புலிகளின் தளபதி திருசூசை தேசியக் கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

# சிறிலங்காவிற்கு உதவிகளை நிறுத்துக; படுகொலைகளை அரசு மறைக்கிறது

## கனேடிய அனைத்துக்கட்சி குழு கண்டனம்

(மொன்றியல்)

''சிறிலங்கா அரசு மிகக் கொடூரமான முறையில் மனித உரிமைகளை மீறிவருவதுடன் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தும் வருகிறது. இந்த நிலையில் கனடா அரசு சிறிலங்காவுக்கு நேரடியாக வழங்கும் உதவிகள் அனைத்தையும் ரத்துச் செய்ய வேண்டும். அத்துடன் சிறிலங்கா அரசு மனித உரிமை மீறல்களை நிறுத்தும் வரை சர்வதேச அமைப்புக்கள் சிறிலங்கா அரசுக்குநேரடியாக எதுவித உதவிகளையும் வழங்கக் கூடாதென கனடா அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்'

இவ்வாறு சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் குறித்து நேரடியாக பார்வையிட அண்மையில் விஜயம் செய்த கனேடிய அனைத்துக் கட்சி குழு கனேடிய அரசை வற்புறுத்தியுள்ளது.

அந்த குழு தனது அறிக்கையில்; சிறிலங்கா அரசினால் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்வது, விசாரணையின்றி சிறையில் அடைப்பது படுகொலைகள் செய்வதன் மூலம் மக்கள் காணாமல் போவது போன்ற மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இவற்றை சிறிலங்கா அரசு ஏற்க மறுக்கின்றது.

எனவே கனடா நாடு சிறிலங்கா அரசிற்கு நேரடியாக உதவிகளை வழங்காது அரசை சாராத வேறு அமைப்புக்க (8ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினையை தீர்க்கலாம்

## ஹொங்கொங் மாநாட்டில் தீர்மானம்

சிறிலங்காவின் தேசிய இனப் பிரச்சினையை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கும்படி ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சிறிலங்காவின் தேசிய ஒற்றுமைக்கான பிரசைகள் குழுவும், இந்தியாவில் உள்ள இந்தியா - சிறிலங்கா நட்புறவுச் சங்கமும் கேட்டுள்ளன.

ஹொங்ஹொங்கில் இந்த வருடம் ஜனவரி 21 முதல் 24 ஆம் திகதி வரை சர்வதேச விவகாரத்துக்கான கிறிஸ்தவ மாநாட்டுச் செயலகத்தின் ஆதரவில் மேற்படி இரு அமைப்புகளும் நடாத்திய மாநாட்டில் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவை வரவேற்பதோடு, இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய ஒரு தீர்வை எட்டுமாறு தெரிவுக்குழுவை வாழ்த்தியிருப்பதுடன், சிறிலங்காவின் ஜனாதிபதி, கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட பிரசைகள் மற்றும் எதிர்க்கட்சிகளை மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கரி (8ஆம் பக்கம் பார்க்க)

## மாணவரை கடத்தியவர்கள் பாதுகாப்புப் படையினரே

### - சு. கட்சி எம். பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் கடந்த 1989, 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முப்பத்திரெண்டு பள்ளிச் சிறுவர்களையும் சிறிலங்கா இராணுவமே கடத்திச் சென்றதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறீபாலா டி சில்வா பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகளை ஜேர்மனியில் குவிப்பதினால் இனப்பிரச்சினை தீராது

### ஹெல்மட் ஹோல்

(பேர்லின்)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அங்கேயே தீர்வு காணவேண்டும். ஜேர்மனியில் தமிழ் அகதிகளை இறக்கிவிடுதால் பிரச்சினை தீரப்போவதில்லை. இவ்வாறு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஹோல் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கைத் தமிழ் அகதிகளை ஜேர்மனிக்கு கொண்டு வந்து குவிப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வாகாது எனவும் தெரிவித்தார்.

## பதுங்கியிருந்த இராணுவம் புலிகள் மோதல்

### ஒரு போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் பாவல்கொடிச்சேனையில் மறைந்திருந்து தாக்கிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். நேற்றுமுன்தினம் பகல் 1.30 மணியளவில் நடைபெற்ற இந்தக் கடும் சண்டையில் இராணுவ தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

போராளிகள் தரப்பில் வீரவேங்கை செல்வன் (துறைநீலாவணை, மட்டக்களப்பு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

ஹெய்ட்டிஅகதிகளை

# அமெரி. வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்புகின்றது

(குவன்டனாமோ)

இராணுவச்சதிஇடம்பெற்ற ஹெய்ட்டியில் பலாத்காரத்துக்கும், வறுமைக்கும் அஞ்சி பல்லாயிரக் கணக்கான ஹெய்ட்டி அகதிகள் பாதுகாப்புக் கருதி அமெரிக்கா சென்றனர்.

ஆனால் இப்பல்லாயிரக் கணக்கான ஹெய்ட்டி அகதிகளுக்கு அமெரிக்கா புகலிடம் அளிக்காது என அமெரிக்கா தெரிவித்துள்ளதுடன் 2,500 அகதிகள்தாயகத்துக்குதிருப்பி அனுப்பப்படுவதற்காக கடற்கரை கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா குவென்டனாமோ கடற்படைத் தளத்தில் சுமார் பத்தாயிரம் அகதிகள் வரையில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களும் தாங்கள் தாயகம் திரும்பினால் பழி வாங்கப்படுவோம் என அச்சம் கொண்டுள்ளதுடன் ''நாங்கள் திரும்பிச் சென்றால் ஒரு படுகொலை இடம்பெறும்'' எனவும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஹெய்ட்டி அகதிகளை திருப்பி அனுப்ப அமெரிக்கநீதிமன்றம் ஒன்று விதித்த தடையை சுப்ரீம் கோட் நீக்கியுள்ளது.

# விலைவாசி உயர்வு; தமிழகத்தில் மறியல்

தி. மு. க. ஆட்சியில் அவசியப் பண்டங்களின் விலை உயர்வை எதிர்த்து அந்த அரசைக் கவிழ்த்து விட்டு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதாவின் அ. தி. மு. க. அரசு விலை உயர்வை குறைக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் தற்போதைய விலைவாசி நாளொருவண்ணம்உயர்வடைந்து சென்றவண்ணம் உள்ளது

இதையடுத்து இந்தத் தாக்கத்தில் இருந்து விடுபட முடியாததமிழகமக்கள்அ.தி.மு.க. அரசு மீது அதிருப்தி கொள்ளத் தொடங்கினர். இதன் வெளிப்பாடே இன்று தமிழகத்தில் விலைவாசி உயர்வை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தவுள்ளனர்.

தமிழக மக்களின் இந்த அதிருப்தியானது எதிர்கட்சியினர் பெரும் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

விலைவாசி உயர்வுக்கு காரணமான மத்திய மாநில அரசின் கொள்கைகளை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் வரும் மார்ச் 2ஆம் திகதி தர்ணா (மறியல்)போராட்டம் நடாத்துவதற்கு எதிர்க் கட்சிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

## யாசீர் அரபாத்திற்கு திருமணம்

அறுபத்து மூன்று வயது நிரம்பியவரும், பாலத்தீன விடுதலை இயக்கத்தின் தலைவருமான யாசீர் அரபாத் விரைவில் திருமணம் செய்து கொள்ள உள்ளார். பொருளாதார விவகாரங்களுக்கான ஆலோசகராகக் கடமையாற்றும் இருபத்தெட்டு வயதுப் பெண்ணையே தமது மனைவியாக்க ஜனாப் யாசீர் அரபாத் தீர்மானித்துள்ளாரென புதுடில்லிப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## திரு. தம்பையா அம்பலவாணர்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சாவகச்சேரியில் வசித்தவருமான (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட்) தம்பையா அம்பலவாணர் அவர்கள் 6-2-92 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக்கணவரும், தர்மகீர்த்தி (படப் பிடிப்பாளர்), தர்மராணி, தர்மகுணதேவி, ஆகியோரின் தகப்பனாரும் சுந்தரலிங்கம், கோடீஸ்வரி ஆகியோரின் மாமனாரும், தேனுகா கீர்த்திகா, அருண் பிரகாஷ், ரவிபிரதீப், விஜிதா, கௌரி சங்கர் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. சுந்தரலிங்கம்

(2192)

## திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

(உரிமையாளர் : ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம்)

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் 24, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் 06-02-92 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சொர்ணத்தின் அன்புக் கணவரும் திருமதி நாகரெத்தினம், சிவராஜா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஜெகன், சுவர்ணகுமார், ராஜ்குமார், ஸ்ரீராம், கவிதா, விஜிதா, ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

63, B. A .தம்பி லேன்
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். (3899)

தகவல் ;
தி ஜெயராஜா
(ஜெகன்) பேரன்

## வரி விளம்பரம்

### பழைய அரசியற் புத்தகங்கள்

இயக்கங்களின், கூட்டணியினரின் மற்றும் ஈழத்து அரசியற் புத்தகங்கள், பத்திரிகைகள் தற்போதைய பெறுமதியில் பெற்றுக்கொள்ளப்படும். யாழ். பழைய புத்தகக்கடை, 32, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (2159)

### சோதிடம்

ஜாதகம் எழுத, அதிர்ஷ்ட எண்களில்பெயரமைக்க, விவாகப் பொருத்தம் பார்க்க, உங்கள் எதிர்காலப்பலனறிய சந்தித்துப் பாருங்கள்-வேலணை சோதிடர் V. A. சிவராசா, 152 B, அரசடிறோட், சந்தர்மடம், யாழ்ப்பாணம். (2189)

### தவறிவிட்டது

மானிப்பாய்க்கும் ஒட்டுமடத்திற்கும் இடையில் துணிபாய்க்குடன்உடுப்புகளும்தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் 70 பலாலிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில்ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2177)

### கல்வி

G. C. E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 25 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து அதி உயர் விசேடதரத்திற்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திராவீதி, சுண்டுக்குளி. (2190)

### வைத்திய சேவை

தலைமுடி வளர, நரைமாறுவதற்கும் மாதவிலக்கு கோளாறு, முகப்பரு, நீடித்த வாதரோகம் ஆஸ்த்மா, குழந்தைப் பாக்கியம் போன்ற சகல நீடித்த வியாதிகளுக்கும் சிறந்த மெய்ஞ்ஞான ஆலோசனைப்படி நுண்ணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்: காலை 9 00-12.00 மணிமட்டும். டாக்டர் எம் கருணாகரன் வேளாங்கண்ணி வைத்தியசாலை 614, ஒட்டுமடம், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (2179)

## இத்தாலி 6 கோடி ரூபா உதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகளைப் பேணுதல் என்பதற்காக இத்தாலிய அரசாங்கம் அறுபது கோடியே ஐம்பது லட்சம் ரூபாவை நீண்டகால அடிப்படையில் கடனாக வழங்கியுள்ளது. இது சம்பந்தமான உடன்படிக்கையொன்று இத்தாலிய, சிறிலங்கா அரசுகளுக்கிடையே கைச்சாத்தாகியுள்ளது.

## 'சார்க்' பொது நிதியம்

(கொழும்பு)

பிராந்திய ஒத்துழைப்புக்கான சார்க் அமைப்பு பொது நிதியம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. சார்க் பொது நிதியத்தின் முகாமைத்துவ ஆரம்பக் கூட்டம் இம்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் பம்பாய் நகரில் கூடவுள்ளது.

சார்க் பொது நிதியத்தின் ஆரம்ப மூலதனம் ஐம்பது லட்சம் டாலர்கள் வைப்பிலிடப்படும். சிறிலங்கா இதற்கென இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந் நிதியத்தின் முதலாவது தலைவராக இந்தியா செயற்படவுள்ளது.

அன்னை பூபதி ஞாபகார்த்த

# பொது அறிவுத் தேர்வு தொடர்பகங்கள்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வுத் தொடர்பகங்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கோட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தொடர்பகம்விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ். மாவட்ட செயலகத்திலும் (நல்லூர்) யாழ். கோட்டத்திற்கான தொடர்பகம் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க யாழ். கோட்ட செயலகத்திலும் மருதனாமட கோட்டத்திற்கான தொடர்பகம் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வலிகாமப் பிரிவு செயலகத்திலும் (மானிப்பாய்) பண்டத்தரிப்பு கோட்ட தொடர்பகம் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பண்டத்தரிப்புகோட்ட செயலகத்திலும் தென்மராட்சி பிரிவுத் தொடர்பகம் விடுதலைப்புலிகள்மாணவர் இயக்க தென்மராட்சி பிரிவு செயலகத்திலும் வடமராட்சிக் கோட்டதொடர்பகம் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வடமராட்சிப் பிரிவுச் செயலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொடர்பகங்களில் அன்னை பூபதி நினைவு பொது அறிவுத்தேர்வுபற்றிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

# 'ஜனசக்தி' திட்டம் தோல்வி; உதவுவதை நிறுத்துக

## உலக வங்கியிடம் ஆரியரட்னா கோரிக்கை

[கொழும்பு]

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஜனசக்தி உதவித் திட்டம்பரிபூரணமாகத்தோல்வியடைந்து விட்டது. ஆகவே சிறிலங்கா அரசுக்கு நிதி உதவி வழங்க வேண்டாம் என்று சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரட்னா உலக வங்கியைக் கோரியுள்ளார். ஆரியரட்னா இது தொடர்பாக உலக வங்கிக்குக் கடிதமெழுதியுள்ளார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வோதயத் தலைவர் ஆரியரட்னாஜப்பான் செல்வாரெனவும் நம்பகரமாகத் தெரிய வருகிறது. சிறிலங்காவுக்கான எதிர்கால உதவிகளைச் சர்வோதய அமைப்பினூடாக மேற்கொள்ளுமாறு கோருவதற்காகவே ஜப்பான் செல்வாரென்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நினைவு கூருகின்றோம் 1992-02-07

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**சுசில்** [தானு துளசிதரன் - 123 திருநகர், கிளிநொச்சி]

**இளங்கோ/அன்ரன்** [யோசப் நிக்கலஸ் மோகன்ராஜ் – பெரியபண்டிவிரிச்சான், மன்னார்]

உருத்திரபுரத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**நிமால்** [ராசலிங்கம் யோகநாதன் - யோகபுரம், கிளிநொச்சி]

**ரவி** [ரவி தனிநாயகம் புவனேஸ்வரன் - உருத்திரபுரம், கிளிநொச்சி]

யோகபுரத்தில் சிறிலங்காப்படையினரின் விமானக் குண்டுவீச்சில் காயமுற்று பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**அன்சார்** [கணபதிப்பிள்ளை கருணாகரன் - 2ஆம் படிவம், முரசுமோட்டை]

மன்னாரில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் நோயல்** [சூசைப்பிள்ளை உதயஞானதாஸ் - பரப்பான்கண்டல், மன்னார்]

**லெப். கரன்மாமா** [முத்துக்குமாரு ஜெயகாந்தராஜா - மயிலணி, சுன்னாகம்]

**ஜீவன்/குமார்** [அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் - நெடுங்கண்டல் அடம்பன், மன்னார்]

1989ஆம் ஆண்டு முட்டுச்சேனையில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**லெப். லிங்கம்** [குழந்தைவேல் கோடீஸ்வரன் - திருக்கோணமலை ]

கோணாவிலில் இந்தியப்படையினர் பதுங்கிஇருந்து தாக்கியபோது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். விசுவாசம்** [விசுவலிங்கம் புத்திரசீலன்- ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு]

மட்டக்களப்பு கொடுவாமடுவில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 பொதுமக்கள்

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். றேகன்** [ திருநாவுக்கரசு சிவபாலன் - கருங்காலி, காரைநகர்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

(சி/3897)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

"அண்ணை..இண்டைக்கு பேச்சிஆத்தைதான் என்னைக் காப்பாத்தினா''...தினசரி இந்திய இராணுவத்தின் ரவைகளின் இடைவெளியினூடே தப்பி வரும் போது இதைத் தான் கூறுவான் சின்ன நஸீர். அதைக்கேட்டு மற்றவர்கள் சிரிப்பார்கள். ஏனென்றால்




அவர்களும் இவனைப்போலத் தான் வேறொருஇடத்தில்இந்திய இராணுவத்தால் துரத்தப்பட்டு வந்திருப்பார்கள். இவன் கூறுவது போல பேச்சி ஆத்தைதான் காப்பாற்றினா என்றால் தங்களை யார் காப்பாற்றினார்?என எண்ணுவார்கள்.ஆனாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருடையநம்பிக்கை என்றெண்ணி அதை ஏற்பதா நிராகரிப்பதா என்ற சர்ச்சையில் ஈடுபடுவதில்லை. ஆனாலும் இவன் அதைச்சொல்லும் அழகைப் பார்த்து ரசித்துச் சிரிப்பார்கள்.

இவன் மிகச்சிறியவன்தான். இவனது தோற்றத்தை பார்த்து இவன் இயக்கத்தில் இருக்கக்கூடியவன் என்று எவருமே சொல்லமாட்டார்கள்.அதுவே இவனுக்கு மிகப் பெரியபலமாகவும் இருந்தது. தினசரிஒவ்வொருஇந்தியஇராணுவத்தின் முகாம்களை நோட்டமிடுவது எந்த இலக்கு தாக்குதலுக்கு சுலபமானது? எந்த முகாமில் இன்றுகூடுதலாக இராணுவத்தினர் மற்றும் வாகனங்கள் காணப்படுகின்றன?எந்தப்பகுதியை இவர்கள் முற்றுகையிடப்படுவதற்குவாய்ப்புஉண்டு? என்ற விபரங்களைத் திரட்டுவதுதான் இவனது பிரதான பணி. ஆனாலும் யாழ்ப்பாணத்தை விட்டுப் புலிகள் போகவில்லை என்பதை உணர்த்தக் கூடிய வகையில் நிகழ்த்தப்

படும் தாக்குதல்களில்இவனும் பங்குபற்றிக் கொண்டிருந்தான். தினசரி குண்டடிப்பு -தாக்குதல்-முற்றுகைதான்.

அதுஉச்சக்கட்டமான நெருக்கடிகள் மிகுந்தகாலம்.இதைவிடஒருநெருக்கடி இனிபெரும்பாலும்தேன்றுவதற்கில்லை. ஆயினும்தமக்கு ஏற்படும் இம் மாதிரியான நிகழ்வுகளைமிகச்

சாதாரணமாகவே நோக்கினர் புலிகள்.இந்த நிலைமை வந்து விட்டதே என்றுயாரும்விரக்தி அடையவில்லை- கவலையடையவில்லை. எமக்கென்று செய்யப்பட்ட ரவை என்றோ ஒரு நாள்எம்மைச்சந்தித்தேதீரும். அதற்காக இன்றைய மகிழ்ச்சியை இழந்துவிட நாம் தயாரில்லைஎன்பதுபோலஇருக்கும் அவர்களது நடவடிக்கை.

அத்துடன் புலிகளையும்இந்தியஇராணுவத்தையும் பொறுத்த வரை "முந்துபவன் வாழ்வான்'' என்ற நிலையே நிலவியது - இந்திய இராணுவமோ நாமோ எதிரெதிரே சந்திக்க நேருமாயின் யார் முன்னுக்கு துப்பாக்கியை இயக்குகிறார்களோஅவர்களேஉயிர் பிழைத்தவர்கள் ஆவார்கள். இல்லாவிடில்தப்புவது அவர்கள் அதிர்ஷ்டம்.

சின்னநஸீர் தப்புவது தினசரி நிகழ்வாக இருந்தாலும் அவற்றில்சில அவனது நண்பர்களால் என்றும் மறக்கப்படமுடியாதவை. ஒருசமயம் திருநெல்வேலி சிவன்கோயிலுக்கும் அம்மன் சேரியிலுக்கும் இடையில் உள்ளவீதியில்வந்து கொண்டிருந்தனர் சின்னநஸீரும் அவனது நண்பர்களும். இவனது கையில் திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லப்பட்ட G3 றைபிள், இடுப்பில் மூன்று கைக்குண்டுகள். சடுதியாய் இந்தியஇரா

ணுவம்எதிர்ப்படவே இவனது நண்பன்ஒருவன் திடீரெனதுப்பாக்கியைமுழக்கினான்தொடர்ந்து ஓட்டம்-ஒருவர் மற்றவருக்காககாத்திருக்கமுடியாது. அப்படி காத்திருந்தால்தகவல் சொல்லவே ஆள்மிஞ்சாது. எனவே அவன் சுட்டபடியே ஓடினான்.அவன்பின்னால் மற்றவர்களும் ஓடினார்கள். இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஏனைய முகாம்களில் இருந்தும் இந்திய இராணுவத்தினர் விரைந்துவந்துஅந்தஇடத்தை முற்றுகையிட்டனர். இந்தமுற்றுகைக்குள் இவனால் தப்ப முடியவில்லை-G3 திருத்தப் படாததால் அதனாலும் சுடமுடியாது. எனவே இந்திய இராணுவத்தின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு அந்தக் கோயில் தேர்முட்டியில் ஏறி G3ஐ அதற்குள் மறைவாக வைத்து விட்டு இரண்டு கைகளிலும் கைக்குண்டுகளை எடுத்து அதன் கிளிப்புகளைவாயினால் கழற்றிவிட்டுக் காத்திருந்தான்.

இவன் அடிக்கடி கூறுவான் 'எனக்கு குப்பியில நம்பிக்கையில்ல.அது எந்தநேரம் காலை வாருமோ தெரியாது குண்டில தான் நம்பிக்கை எனக்கு. ரெண்டுகுண்டு ஆமிக்கு-ஒண்டு எனக்கு''... என்று.

இப்போது அந்த நிலையை தோற்றுவிக்க இருகைக்குண்டுகளுடன்அவன் தயார்.காலடிச் சத்தங்கள் ஒய்ந்தன. பிற்பகல் 4.30 மணியளவில் தான்முற்றுகையை முடித்து இராணுவத்தினர் சென்றனர். அது வரை அவன் அந்த நிலையிலேயே இருந்தான்.



சின்னநஸீர்

கையில் இருந்த குண்டின் கிளிப்புகளையும் கழற்றிஎறிந்தாயிற்று.அதை எடுக்க முடியாது. எடுத்தாலும் இருகைகளிலும்குண்டுகள் இருப்பதால் திரும்ப கிளிப்பைப் போடவும் முடியாது. எனவே கைகளில்

குண்டை ஏந்தியபடியே தனது நண்பர்களிடம்சென்றான்.வழியில் சந்தித்த ஒருபொது மகனிடம்''அண்ணை ஒரு சணல்எடுத்து இதைக் கட்டுங்கோ'' என்றுவேண்டிக்கொண்டான். கொஞ்சம் தவறி விழுந்தால் தானும் தப்பமுடியாது எனத் தெரிந்தாலும் அதற்காக இவனைஇழந்துவிடத்தயாரில்லாத அந்த பொதுமகன் அவ்வாறே செய்தார். ஆனாலும் இவனுக்கு நம்பிக்கையில்லை. அப்படியே கைகளில் ஏந்தியபடிசென்றான். நண்பர்களைச் சந்தித்ததும் வழியில் சந்தித்த ஒரு பெண்ணிடம் ' அக்கா ஹெயாப்பின் தாங்கோ'' என்று வாங்கி அவற்றை இரு கைக்குண்டுகளிலும் மாட்டிக்கொண்டு சென்றான்.தேர்முட்டியில்வைத்த G3ஐயும்பின்னர் எடுத்துக்கொண்டுவந்தான்.

இவன் நம்பிக்கை வைத்திருந்த அந்தப்பேச்சியாத்தையின் கோயிலடியில்தான் பெரும்பாலும் இவனது நடமாட்டம் இருக்கும் ஒருமுறை அந்தஇடத்திற்கு வந்த இந்தியப்படை பின்னர் குறைந்த எண்ணிக்கையுடனேயே முகாம் திரும்பியது.அதற்கு அண்மையிலுள்ள ஓரிடத்தில் இவன் இரவில் தங்குவதுண்டு அந்த இடத்திலும் ஒருஎட்டப்பனின் வாரிசு இருந்தான்.அவனது தகவலை அடுத்து அந்தப்பகுதி முற்றுகையிடப்பட்டது. முற்றுகையை உடைத்துக் கொண்டு இவன் தப்பியோடினான், தப்பியோடிய இடம் செம்மணி வயல் வெளிப்பகுதி- இந்தியஇராணுவத்தினர் ஜீப்பொன்றில் துரத்தினர் இவன் கைக்குண்டை வீசினான்.கைக்குண்டு ஏற்படுத்திய புகை-அதனைத்தொடர்ந்து தமது உயிரைப்பற்றிஇந்திய இராணுவத்தினர் கொண்ட அச்சம்-இரண்டின் வெளிப்பாட்டினால் ஜீப் புரண்டு விட்டது. இவன் தப்பிச் சென்று விட்டான். அம்முற்றுகையில் இவனது நண்பனொருவன் உயிருடன் பிடிபட்டான்- எனவே இனித்தாமதிக்க முடியாது.அவனுக்குத்தெரிந்த ஓரிடத்தில் புதைக்கப்பட்ட ஆயுதத்தை எடுக்க வேண்டும். எனவே இந்த இடத்திற்கு விரைந்துசென்று ஆயுதத்தைப் பாதுகாப்பாக கொண்டு வந்தான்-சித்திரவதையின் காரணமாக இவனதுநண்பன்அந்த இடத்திற்கு இந்திய இராணுவத்தினரை அழைத்துவந்தான். நிலைமையைப் பார்த்த இந்திய இராணுவத்தினர் தமது ஏமாற்றத்தைஅங்கிருந்தமூதாட்டியை தாக்கியதன் மூலம் தீர்த்துக்கொண்டனர்.இதைப் போலவே ஒவ்வொரு முற்று

கையிலும் இவன் எப்படி ஆயுதங்களைக் காப்பாற்றினான் என்பதை இவனுடன் குண்டடித்து.கிளைமோர் தாக்குதல் நிகழ்த்தியஇவனது நண்பர்கள் கதை கதையாகக் கூறுகின்றனர் அவை ஒரு நாவலுக்குப் போதுமானவை.

எண்ணற்ற தாக்குதல்களில் இவன் கலந்து கொண்டாலும் சிறிலங்காஅரசு நிர்வாகத்தை தமிழீழமண்ணில் திணிப்பதற்காக நடைபெற்ற தேர்தல் காலங்களில் நிகழ்ந்த தாக்குதல்களே முக்கியமானவையாகும்.அவை மிக வேகமாக ஒவ்வொரு இடமாக மாறி மாறி நடத்தப்பட்ட தாக்குதல்களாகும்.

இந்திய இராணுவத்தினரின் மிரட்டல்கள,அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் தான்வாழ்ந்த நாயன்மார்கட்டு கிராமத்தில் திலீபனின்நினைவுதினத்தன்று உண்ணாவிரதம் பொதுக்கூட்டம்போன்றவற்றிற்கு ஒழுங்கு செய்துமக்களைஎழுச்சிபெறச் செய்தான்.

15-07-1989

அன்றுகாலை கல்வியங்காட்டுப் பகுதியில் இவன் தனது இரு நண்பர்களுடன் வந்து கொண்டிருக்கையில் அடிக்கடி நிகழும்அந்தச் சம்பவம்நிகழ்ந்தது-இந்திய இராணுவத்தினர் எதிர்ப்பட்டனர்.மோதல்நடந்தது-மூன்று இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். சுட்டபடியே ஓடிய அந்தஇருநண்பர்களும் பொதுமக்கள் உதவியுடன் தப்பிவிட்டனர். நஸீர் வருவான் என்று காத்திருந்தனர்.கைக்குண்டுச்சத்தம்தான் கேட்டது. அவன் அடிக்கடி கூறும் ' எனக்கு குப்பியில நம்பிக்கையில்ல-ரெண்டு குண்டு ஆமிக்கு. ஒண்டு எனக்கு'' என்ற வாக்கியம்தான்உடனே அவர்களுக்கு நினைவுக்கு வந்தது.

ஆனாலும் காத்திருந்தனர். எப்போதுவீட்டுக்குச்சென்றாலும் தாயின் மடியில் புரண்டு படுப்பது இவனது வழக்கம். அவர் இவனைத் தேடி வந்தாலும் அவ்வாறே இவன்நடந்து கொள்வான். அது யாருடைய வீடு என்றும் பார்க்க மாட்டான். அப்படிப்பட்ட அந்தக் குட்டிநண்பனைவிட்டுப்போக மனமில்லை அவர்களுக்கு.அவனது சாவு உறுதிப்படுத்தப்பட்டதும் "பேச்சியாத்தைதான் என்னைக் காப்பாத்தினா'' என்ற அவனது குரலை மீண்டும்ஒலிக்கச்செய்யாததுக்காக அந்தப் பேச்சியாத்தைமேல் ஆத்திரமாக வந்தது அவர்களுக்கு.

# அயடீன் (IODINE)

## சத்துக் குறைவினால் ஏற்படும் சில நோய்களும், அறிவுரைகளும்

திடீரென எடை கூடுதல், அதிகளவு சோம்பல் தன்மை, 'உணர்ச்சி குறைதல்' போன்றவை அயடீன் சத்துக் குறைவினால் ஏற்படும். 'அயடீன்' என்கிற மூலப் பொருள் மண்ணில் பெருமளவு காணப்பட்டாலும். இலங்கையின் மேல் மாகாணப்பகுதி, மத்தியமாகாண்ம், தென் மற்றும் சப்பிர--ஊவா மாகாணங்கள், குருநாகல் போன்ற இடங்களிலுள்ள மண்ணில் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுவதால்.— இவ்வியாதி ஏற்படக் கூடும்.

### அயடீனின் வரலாறு

மனிதனுக்குத் தேவையான இந்த அயடீனுக்கு நீண்ட வரலாறுண்டு. 1811-ம்ஆண்டு 'கியூரோய்ஸ்' (COURJIS) என்பவராலேயே கடலுணவுகளிலிருந்து 'அயடீன்' முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பின்னர், 1830-ம் ஆண்டில் 'பிரிவோஸ்ற்' (Prevost) என்பவர் தான், அயடீன் பற்றாக்குறைக்கும், கழுத்தில் ஏற்படும் கழலைக்கும் (Goitre) உள்ள தொடர்பைக் கண்டுபிடித்தார். கழுத்திலுள்ள 'தைரோயிட்' (Thyroid) என்கிற சுரப்பி தயாரிக்கிற 'தைரொக்ஸின்' (Thyroxin) க்கு 'அயடீன்' சத்து மிகவும் அவசியம் என்பதை 1850-ம் ஆண்டில் ''சற்றின்'' (Chatin) என்பவர் கண்டு பிடித்தார்.

### அயடீன் எப்படிக் கிடைக்கிறது?

கடல்நீர். கடலுணவுகள், கடலுக்கருகில் வளரும் தாவரங்களில் 'அயடீன்' பெருமளவில் காணப்படுகிறது. உணவிலும் நீரிலும்காணப்படும்வேறு சில மூலகப்பொருட்கள், உதாரணமாக குளோரின் கல்சியம், மக்னீசியம் போன்றவை. அயடீனை பாவிக்கும் திறனைக் குறைக்கின்றன. இவை குளோரீனிடப்பட்ட குடிதண்ணீர், சில மரக்கறி வகைகள் உதாரணமாக—கோவா இனகுடும்பத்தைச் சேர்ந்த கீரை வகைகள் என்பவற்றில் காணப்படுகிறது இதனால், கழுத்தில் கழலை ஏற்பட்டு, வீக்கமேற்படுகிறது.

### அயடீன் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சினைகள்

உடலில் 'அயடீன்' பற்றாக்குறைஏற்படும்போதுஉடலில்உப்பினதும்நீரினளவும்அதிகரிக்கும். இதனால்உடல்நிறை கூடும்.சோர்வு ஏற்படும். தாம் பத்திய வாழ்வில் நாட்டம் குறையும்.இரத்தத்தில் கொழுப்பினதும், 'கொலஸ்ட்ரோலினதும்' அளவு அதிகரிக்கும்.இதனால்,இரத்த அழுத்தம் மாரடைப்பு போன்ற வியாதிகள் ஏற்படும் ஆபத்துஅதிகரிக்கும். மூளையிலுள்ள 'பிட்டுயட்டறி' (Pituitary Tumours)யில் கட்டிகள் வளரும் ஆபத்திருக்கிறது.

### தேவைப்படும் அயடீனின் அளவு

பலவிதமான ஆராய்ச்சிகளின் பின்னர் டாக்டர் வெயின் (Dr. Wayne) குழுவினர், 1964 ஆம் ஆண்டு ஒருநாளைக்குத் தேவையான அயடீன் அளவு ஆணுக்கு 130 மைக்கிறோ கிராம என்றும் பெண்ணுக்கு 100 மைக்கிறோ கிராம் என்றும் கண்டுள்ளனர். ஆனாலும் ஒருவருடைய வயது, உண்ணுகிற உணவுஉடல்உழைப்புஎனபவற்றைப் பொறுத்து ஒருவருக்குத் தேவையான 'அயடீனின்' அளவு கூடிக்குறைகிறது. எனினும், கழுத்தில் கழளை (Goitre) ஏற்படாமலிருக்க குறைந்தது ஒரு நாளுக்கு 70 மைக்கிறோகிறாம் அயடீன் கொண்டேயாக வேண்டும். அயடீனின் அளவு குறைந்தால் பிரச்சினைகள் ஏற்படுவது போல், அயடீனின் அளவு சாப்பாட்டிலோ, இரத்தத்திலோ கூடினாலும் ஆபத்திருக்கிறது.

### பெண்களுக்கு அதிகளவில் தேவைப்படுகிறது.

உடலின் தொழிற்பாட்டுடன் 'அயடீனின்' அளவு நேரடியாக சம்பந்தப்பட்டதாகையால். பெண்களுக்கு ஏற்படும் 'பூப்பெய்தல்' 'தாய்மை எய்தல்' 'பாலூட்டுதல்' போன்ற முக்கியமான மூன்று நிகழ்வுகளின்

மாறன்

போது உடலின் தொழிற்பாடும் அதிகரிப்பதால் 'அயடீனின்' அளவும் அதிகரிக்கிறது.

### அயடீனின் அளவை அளவிடுதல்

மருந்தகத்தில் விற்பனை செய்யப்படுகின்ற 'அயடீன்உப்பை' (TINCTURE OFIODINE) இரவில்படுக்கைக்குப் போகமுன்னர். தொடையின் உட்புறத்தில் ஐந்து சென்டி மீற்றர் வட்டத்துககு பூசிவிடவேண்டும்.

மறுநாள் காலையில் பார்க்கும் போது,

(அ) அயடீனின் உப்பின் நிறம் முற்றாக மறைந்திருந்தால் - உடலில் அயடீன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# மனித வாழ்வு

வயல் வெளிக் காற்று மாணிக்கத்தின் முகத்தில் அடித்துக் கொண்டிருந்தது வவுனியா நகருக்குள் இருந்து அவன இப்போது தான் வெளியே வந்திருந்தான். எந்த நேரமும் உயிர் குடிக்க நிற்கும் மனிதப பேய்களிற்கூடாக வவுனியா நகருக்குள் சென்று வருவது ஒன்றும் இலகுவான செயல இல்லை.

இன்றைக்கு ஏதோ மாணிக்கத்திற்கு எந்தப் பிரச்சினையும் நடக்கவில்லை. வேளைக்கே வந்துவிட்டான்.

மிதிவண்டியின் பின் பாரம் தாங்கியில் பொருள்களை அசையாது இறுக்கமாக கட்டிவிட்டு ஒரு தரம் தள்ளிநின்று சரியாக இருக்கிறதா எனப் பார்த்தான் மாணிக்கம். மனதிற்கு நிறைவாக இருந்தது. முன்னால் சென்று – தொங்கிக் கொண்டிருந்த ஓலைப் பையை தடவிப் பார்த்தான். சில சவர்க்காரங்கள்.

''அப்பா இந்த முறை எங்களுக்கும் ரெண்டு சவுக்காரம் கொண்டு வாங்கோ. ஊத்தை உடுப்போட போக டீச்சர் ஏசிறா'' மகளின் குரல் நினைவில் வந்து விட்டுப் போனது. எல்லாப் பொருள்களையும் ஒரு தடவை தடவிப்பார்த்தான். மனதிற்குள் ஏதோ ஒரு சந்தோசம்.

யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போய்ட்டா பிரச்சினை இல்லை. அக்கம் பக்கத்திலை வாங்கிய கடனிலையும் கொஞ்சத்தைக் கொடுத்திட்டு ஒரு அஞ்சாறு நாளைக்கு வீட்டுப்பாடையும் பார்த்திடலாம்.'

சங்குப்பிட்டி – கேரதீவு பாதையையும் அதில் வரிசையில் நின்று தூங்குவதையும் நினைத்தால் அவனுக்கு வெறுப்பாக இருந்தது மனதில் வேகமாக போய்விட வேண்டும் என்றொரு ஆவல் தோன்றி இருந்தது.

மாணிக்கத்தின் மிதிவண்டி கண்டி வீதியை முத்தமிட்டவாறே முதலில் தள்ளாடியும் பின்பு சீராகவும் விருப்பமில்லாத - பழக்கப்படாத மாடுகள் வண்டியை இழுப்பது மாதிரி ஓடத்தொடங்கியது.

வீதியின் இருபக்கத்து காட்டு மரங்களிலும் மாரியின் ஆரம்பத்து மழையை அனுபவித்த குளிர்ம தெளிவாகத்தெரிந்தது. இன்றும் வானம் அவ்வளவு நன்றாக இல்லை.

ஓமந்தைச் சந்தியில் மாணிக்கம் - மிதிவண்டியை நிறுத்தினான். அந்தச் சந்திப்பு போரின் பல வடுக்களைத் தாங்கிக்கொண்டு - வயது போன சண்டியன் ஒருவனை மாதிரி தளர்வுடன் சிறிது கலகலப்பாக இருந்தது ஓமந்தைச் சந்தியின் பழைய கலகலப்பும்-சனநெரிசலும் மாணிக்கத்தின் மனதில் ஒரு கணம் சோகமாக தட்டிச் சென்றது.

தேநீர்க் கடைக்குள் சென்றவன் - சிறிது நேரத்தின் பின் திரும்பி வந்தான். தேநீரின் வெறுக்கத் தக்கதான கசப்பு இன்னும் நாக்கில் நின்றது. பெரிதாக ஒரு தரம் காறித் துப்பி விட்டு மிதி வண்டியை எடுத்தான்.

அந்த நேரம் தான், கலவரம் தோய்ந்த முகத்துடன் ஒரு மிதி வண்டியில் வந்த இருவர் 'சங்குப்பிட்டியில் ஆமியை இறக்கிப் போட்டாங்களாம்' என்றார்கள்.

அவன் திகைத்துப் போய் நின்றான்.

★ ★ ★

வவுனியாவிலிருந்து சில மிதி வண்டி வியாபாரிகள் தங்களால் இயன்றளவு பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்தனர். இந்தப் பிரச்சினையை அவர்கள் முதலிலே கேள்விப் பட்டிருக்க வேண்டும். ஆனாலும் சத்தமிட்டவாறே கலகலப்பாக வந்தார்கள்.

'அண்ணை புதுப்பாதை ஒன்று திறபடாமல் போகாது-முதல்ல கிளிநொச்சிக்கு வாங்கோ' அவர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள அந்தச் சந்தியில் நின்ற மிதிவண்டிகள் எலலாம் பாரங்களை சுமந்து கொண்டே கிளிநொச்சியை நோக்கி ஓடத் தொடங்கின.

★ ★ ★

முரசுமோட்டை மூன்றாம் கண்டலுக்கு அருகால இறங்கி ஊரியான் பாதையில் மாணிக்கத்தின் மிதிவண்டி மிக மெதுவாக ஓடியது. முன் இருட்டுக் காலம் – எதிரில் எதுவுமே தெரியவில்லை பௌர்ணமி முடிந்து இரண்டு நாள்தான் சென்றிருக்கும் 'எப்பிடியும் பத்து மணிக்குள்ள நிலவு வந்திடும்' மனது தனக்குச் சமாதானம் சொல்லியது.

நல்ல வீதி. இடை இடையே தான் சிறு பள்ளங்கள். காலையில் பெய்த மழையை வாங்கி தம்மை உருமறைப்புச் செய்த படி இருந்தன. மாணிக்கத்தின் மிதிவண்டியோ வெளிச்சமில்லாத அந்த முன்னிரவிலும் எப்படியோ எல்லாப்பள்ளத்தையும் தேடித் தேடி விழுந்தபடியே எழும்பி வந்தது. அந்த இரண்டரை மைல் தூரமும் அவனுக்கு எந்தப் பிரச்சினையையும்தரவில்லை.

நிலவு வானில் - சாதுவாக ஏறத் தொடங்கியது. ஒருமரக் கூடலுக்கு கீழே ஓர் ஓலைக் கொட்டில் - இப்போது கடையாக மாறி இருந்தது. அந்த இடத்தில் பலர் நிழல் மனிதர்களாக நின்றனர். அந்தப் பாதையை கடந்து வருபவர்களுக்கு அந்தக் கடை ஒரு பெரும் ஆறுதலாக இருக்க வேண்டும் அவ்விடத்தை மெதுவாகக் கடக்கும் பொழுது எதிராக வந்த ஓர் இளைஞன் சொன்னான்,

'என்னண்டண்ணை இந்தப் பாரத்தோட இதைக்கடக்கப் போறீங்கள்.' அந்த இளைஞன் பதிலுக்காக காத்திராமல் தன் அனுபவங்களை ஒரு வார்த்தையில் கூறிவிட்டு சென்று கொண்டிருந்தான். மாணிக்கத்திற்கு தெரியும். இப்போ பத்துப் பதினைந்து நாட்களாக நல்லமழை பெய்யுது - பாதை பழுதாகித்தான் இருக்கும். ஆனால் ..

'ஓ - கடசி - ரெண்டு நாளாவது மழை பெய்யாமல் இருந்திருந்தா பிரச்சினை இராது' மனம் சலித்துக்கொண்டது.

வீதியில் - நிலவு வெளிச்சத்தில் தெறித்துக் கொண்டு மழை வெள்ள நீர் தேங்கி நின்றது. மாணிக்கம் கவனித்து விட்டான். ஆனால் இறங்கமுதலே மிதிவண்டி சேற்றில இறங்கி நின்றது. மாணிக்கத்தின் கால்களில் அரைவாசி சேற்றில் புதைந்தன. மிதிவண்டி அவன் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் அவனையும் தள்ளிக்கொண்டு சேற்றில் சரிந்தது.

அந்த வீதியால் வந்து கொண்டிருந்தவர் ஒருவர் ஓடி வந்தார். அவர் சேற்றுப் பள்ளத்திலிருந்து மாணிக்கத்தையும் மிதிவண்டியையும் ஒருவாறாக மீட்டெடுத்தார்.

ஒருவேளை அந்த மனிதர் வந்திராவிட்டால்... சாவு எல்லோருக்கும் பொதுவானது. சாவை நோக்கிய பாதையில் சாவை நினைத்துக் கொண்டு ஒருவராலும் வாழ முடியாது.

மாணிக்கத்தின் போராட்டம் அந்த இடத்தில்தான் ஆரம்பித்தது. இந்தப் பகுதியில் இன்று மதியத்திற்குப் பிறகு கூட நல்ல மழை பெய்திருக்க வேண்டும். நிலம் ஊறிப் போய் மெதுமெதுப்பாக இருந்தது.

'அண்ணை, எனிச்சைக்கிலில போகேலாது - உருட்டிக் கொண்டு போங்கோ' என்றுவிட்டு அந்த மனிதர் வேகமாக நடந்தார்.

உருட்டுவது என்றால் சும்மாவா? வண்டியில் ஏற்றப்பட்டிருந்த சுமை ஒரு பக்கம் இழுத்தது. நிலம் வேறு புதைத்தது. இடைக்கிடை மறித்த சக்திகள் வேறு சறுக்கி விழுத்தின. சிறு வயது தொடக்கம் உழைத்து உரமேறிய மாணிக்கத்தின் உறுதியான உடல் அந்தக் கொடுமையான பாதையில் சுமையுடன் போராடத் தொடங்கியது.

அவனுக்குள் - அவனையும் அறியாத ஒரு வேகம் உருக்கொள்ளத் தொடங்கியது. பார்வதி - இந்தப் பதினைந்து வருட வாழ்க்கையில் அவனுடன் சேர்ந்து குடும்பச்சுமையை பகிர்ந்து கொள்ளும் அவள் தான் அவனது உலகம். அவர்கள் இருவரும் வாழ்க்கையின் இனிமையை அனுபவிக்கவேண்டிய வயதெல்லாம் துயரத்தையும் - துன்பத்தையுமே அனுபவித்தார்கள். எஞ்சி இருந்ததெல்லாம் நிலாவும் உதயனும் தான்.

அப்போது மாணிக்கத்திற்கு இருபத்தைந்து வயது இருக்கும், முருகேசருக்கு தெரியாமல் பார்வதியை கூட்டிவரும் பொழுது 'காதுத் தோட்டையும் கழட்டிக் கொடுத்து விட்டு வா' என்று உறுதியாகச் சொல்லி விட்டான். அதன் பின்பும், யாரிடமும் கை ஏந்தும் நிலை அவனுக்கு வரவேயில்லை.

நாட்டில்விடுதலைப்போராட்டம் ஆரம்பமாகி - வளர்ச்சி அடையத் தொடங்க சிங்கள அரசின் நெருக்கடிகளும் அதிகரிக்கத் தொடங்கின. நாட்டு நிலைமை மாறிப் போனதும் வேலைகள் எல்லாம் உருமாறிப் போனது மாணிக்கத்திற்குக் கிடைத்த புதுவேலை இது தான். இது அவனது மூன்றாவதோ நாலாவதோ பயணம்.

பாதை மனித நடமாட்டத்தின் அதிகரிப்பால் சதுப்பாய்ப் போய்க்கிடந்தது. யாரோ ஒருவன் உழவு இயந்திரத்தை ஓடிப் போயிருக்கிறான் போலும். அது வேறு பாதையை சிதைத்திருந்தது. அந்தக் களித்தரையில் ஒவ்வொரு அடியும் நிதானித்து வைக்க வேண்டியிருந்தது.

வெட்டை வெளிகளும நிழலாக தெரிந்த கட்டைக்காடுகளும் கடந்து கொண்டிருந்தன. ஒரு இடத்தில் சிறுவர்கள் விளையாடுவதற்கு போடுவது மாதிரி ஒரு கொட்டில் கிடந்தது. யாரோ களப்பில் மீன் பிடிப்பவர்கள் அந்தக் கொட்டிலைப் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்ததும் இளைப்பாறவேண்டும் போல மாணிக்கத்திற்கு இருந்தது மிதிவண்டியை கொட்டில் கப்பில் சரித்தான். அந்தக் கொட்டிலும் ஒருதரம் ஆடிவிட்டு சுமையை சிரமத்துடன் தாங்கிக் கொண்டு நின்றது. ஈரமாக இருந்த நிலத்தில் மாணிக்கம் அமர்ந்தான்

காடுகளையும் களப்புகளையும் தடவி வந்த கூதல் காற்றுப் பட்டு உடல் சில்லிட்டது. குனிந்து கால்கள் இரண்டையும் கட்டிக் கொண்டு குடங்கிக் கொண்டான். நெஞ்சு சூடாக இருந்தது.

'ஒரு தேனீர் குடித்தால் .' மனது அங்கலாய்த்தது. எழும்ப நினைத்தான் உடல் ஒத்துழைக்க மறுத்தது. மீண்டும் இருந்தான். 'வீட்டை போனதும் ரெண்டு நாளைக்கு நித்திரை கொள்ள வேணும்' முடிவாக்கிக் கொண்டான்.

எதிர்ப் பக்கமாக நால்வர் வந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் சற்று வயது அதிகமானவராக இருக்க வேண்டும். அடைத்த குரலில சற்றுப்பலமாக ஏதோ சொல்லிக் கொண்டே வந்தார்.

"இந்த வெட்டையில கொம்படி அம்மன் எண்டொரு கோயில் இருக்குது; அந்த கோயிலை வைத்துக்கொண்டு தான் இந்த வெட்டையை கொம்படி வெட்டை எண்டும் இதால போற எல்லாப் பாதையையும் கொம்படிப் பாதை எண்டும் சனம் சொல்லுது. ஆனா ஒவ்வொரு பாதைக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கு. அதெல்லாம் இப்ப மறைஞ்சு போச்சு—கொம்படிப் பாதை என்ற பெயர் தான் நிலைச்சுப் போச்சுது.'' கிழவர் சொல்லிக் கொண்டே கொட்டிலடியில் இருந்தார். மற்றவர்களும் ஆறுதலாக இருந்தார்கள். அந்த இடம் தான் இந்தப் பாதைக்கு நடுவாக இருக்க வேண்டும். மாணிக்கம் எழுந்தான். சாரத்தை ஒரு தரம் அவிழ்த்து திரும்பவும் முடிச்சுப் போட்டு இறுக்கமாகக் கட்டிவிட்டு மிதிவண்டியை நிமிர்த்தினான். சற்றுத் தள்ளி 'ட' வடிவத்தில் பதுங்கு குழி ஒன்று சாதுவான சிதைவோடு கிடந்தது. இந்த இடத்திலயும் ஆனையிறவு சண்டை நேரத்தில் 'பெடியள்' எதிரியை எதிர்பார்த்து நின்றிருக்கிறார்கள் என்று தெரிந்தது.

மிதிவண்டியை உருட்டினான். காடுகள் முடிந்து வெட்டை வெளியொன்று பெரிதாக விரிந்தது. சிறு கடல் ஒன்று குளம் மாதிரி அசையாது நின்றது. அது ஆனையிறவுக் களப்பாக இருக்கலாம். தண்ணிக் கரையோரமாக மாணிக்கம் நடந்து கொண்டிருந்தான். சேற்றிலையும் தண்ணியிலையும் நடந்து வந்தது குளிரில் உடல் முழுவதும் வெடவெடுத்து நடுங்கியது. நனைந்த சாரத்தில் மண் ஒட்டிக் கொண்டு-அருவருப்பாகப் பிசுபிசுத்தது.

கால்கள் பலமிழந்து தள்ளாடின. மனம் வெறுப்பில் கொதித்தது. இவை எல்லாவற்றையும் எறிந்து விட்டுக் கைகளை வீசிக்கொண்டே ஓட வேணும் போலிருந்தது இந்தப் பாதைக்கு முடிவு வராதா? இதயம் ஏங்கியது.

'இன்னும் எவ்வளவு தூரம்?' அவனுக்குத் தன்னிலேயே வெறுப்பு வந்தது. திடீரென மிதிவண்டியின் பின் சில்லு சேற்றில முற்றாக இறங்கி இருந்தது. மாணிக்கத்தின் கால்கள் கூட முழங்காலுக்கு மேல் தாண்டு போய் விட்டது. அதிலிருந்து உதவி இல்லாமல் அவன் மீளவே முடியாது

நல்ல வெட்டை வெளி. நிலவு வெளிச்சத்தில் சிறுகடல் தன்னை அடையாளம் காட்டியபடி அசையாது கிடந்தது. நிமிர்ந்து வானத்தை பார்த்த மாணிக்கம் திகைத்துப் போய் நின்றான். இன்னும் சில நிமிடங்களில் கரு மேகங்கள் நிலவை மூடிவிடும். பின்பு அந்த வெறுக்கத்தக்க இருட்டில் பெரிய மழை ஒன்று பெய்யும். அவனை இந்த வெட்டை வெளியில் வைத்து நனைத்தபடியே அந்த மழை இந்தப் பாதையை மேலும் தன்னால் இயன்றமட்டும் சிதைக்கும்.

அரை மணித்தியாலத்திற்கு அதிகமாக இருக்கும் மாணிக்கம் அதிலேயே நிற்கிறான். மிதிவண்டி கனத்தது. அந்தப் பக்கமும் — இந்தப் பக்கமும் விழுந்து விடுமாற்போல இடைக்கிடை இழுத்தது. எவராவது வரக்கூடாதா என்று நெஞ்சம் ஏங்கியது தூரத்தில் பேச்சுக் குரல்கள் கேட்டன. மனதில் ஓர் ஆறுதல் எழுந்தது.

யாரோ சிலர் யாழ்ப்பாணத்தில் பிரச்சினை என்றவுடன் தங்கள் உறவுகளைத் தேடி வாழ்ந்தாலும் — மடிந்தாலும் அவர்களுடனேயே அந்த மண்ணிலேயே இருக்க வேண்டும் என்ற முடிவுடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

## இளவேனில்

''அண்ணை ஏனண்ணை இதுக்குள்ள கொண்டு வந்து புதைச்சனீங்கள் கொஞ்சம் மேலால கொண்டு வந்து இருக்கலாமே'' என்றான் அவர்களில் ஒருவன். எல்லோருமாக சேர்ந்தார்கள். மிதிவண்டி ஒருவாறாக சேற்று அகழியில் இருந்து வெளியே வந்தது. ஆனால் சில்லுக்குள் சேறு இறுகி அசையமாட்டாமல் நின்றது.

''அண்ணை மழை வரப் போவுது''

''சரி தம்பியவை—நீங்கள் போயிட்டு வாங்கோ'' குரலாலேயே நன்றியைத் தெரிவித்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொர்பசேவ் அவர்களை மன்னித்து விடு!

கொர்பசேவ்!
அவர்களை
மன்னித்து விடு!
'எல்லோருக்கும்
சொர்க்கம் சொந்தம்'
என்றாய்!
உன்னை மட்டும்
நரகத்திற்கு அனுப்புகிறார்கள்!
'எல்லோருக்கும் வேலை' என்றாய்!
உனக்கு மட்டும்
கட்டாய ஓய்வு தருகிறார்கள்!
எல்லோருக்கும்
விருந்து சமைத்தாய்!
உன்னை மட்டும்
பட்டினியாய், பந்தியை
விட்டே விரட்டுகிறார்கள்!
எப்படி முடிந்தது?
ஒரு சிற்பியை
'கல்'லால் அடித்துத்
துரத்துவதற்கு?
கொர்பசேவ்!
அவர்களை
மன்னித்து விடு!

- பா. ஈஸ்வரமூர்த்தி

நன்றி: ஜூனியர் விகடன்

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணம் - ஒரு தனி நாடு

பதினேழு வருடங்களுக்கு முன்பு நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளேன். இன்று போல் அன்றும் கடல் நீரேரியின் மேல் அமைந்திருக்கும் தாம்போதி மாத்திர மன்றி மொழி பண்பாடு. சமயம், இயற்கைத் தாவரங்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தைச் சிறிலங்காவிலிருந்து ஒரு தனியான நாடுபோல் பிரித்துக் காட்டின. கடலை ஊடறுத்துச் செல்லும் வரட்சியும், உஷ்ணமும் பொருந்திய மணற்பரப்பில வெப்பத்தைத்தரும் ஆகாயத்திலிருந்து பூமியைக் காக்கும் அரண்களாக பெரிய விசிறிகள் போன்று பனைமரங்கள் நிற்கின்றன. இரவுவேளையில் காற்று மண்டலம் வரட்சியாக இருக்கும்போதெல்லாம் வானத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்.

தமிழ் மொழி பேசும் இந்துக்களான யாழ்பபாண மக்கள் தனித்துவமான அவர் சூழலுக்குப்பழக்கப்பட்டவர்கள். கடினமான உழைப்பும் சிக்கனமான பழக்க வழக்கங்களுமுடைய யாழ்ப்பாணத்தவர்களில் பெருமளவில் மருத்துவர்களும், சட்டத்தரணிகளும், உள்ளார்கள். புவியியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாவும் யாழ்ப்பாண மக்கள் தென் இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்திலிருந்து 30 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. 1950களில் அமுலாக்கப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் பௌத்த தென்பகுதியிலிருந்து தமிழ்மக்கள் தனித்து வாழ்ந்த நிலையை மேலும் வலுவாக்கியது. இது 170 லட்சம் சனத்தொகையில் 18 வீதமான தமிழர் சிறுபான்மையினர் என்பதை ஊர்ஜிதப்படுத்தியதுடன் பிரிவினைப் போர் முளை கட்ட உதவியது.

"பிரித்தானியா ஆட்சியில்நாம் எல்லோரும் சமமாகக் கருதப்பட்டோம். தமிழர்கள் கடின உழைப்பையும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதையும் கண்ட ஆங்கிலேயர் தொழிலுக்கு உதவும் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயர் வெளியேறியதும தொழில் வாய்ப்புகளை எமது இளைஞர் இழந்தனர். கடலோர மீன்பிடியும், வேளாண்மையும் தான் இப்போது உள்ள தொழில்கள் என்று விளக்கம் தருகிறார் ஒரு மதத்தலைவர்.

யாழ்ப்பாணச் சமூகம் பழைமையானதும் கண்டிப்பானதும், சாதியமைப்பில் நம்பிக்கை கொண்டதுமான ஒரு கட்டுப்பெட்டிச் சமூகம். இளைஞர்கள் கல்விகற்பதற்கென்றே வளர்க்கப்படுகிறார்கள். பெண்கள் திருமணமாகும் வரை வீட்டிற்குள் சமையற்கட்டில் வளர்க்கப்படுகிறார்கள்.

## மக்கள் கஷ்டங்கள்

யாழ்ப்பாணம் நிரந்தரமான ஒரு மாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதை என்னால் அவதானிக்க முடிகிறது. பனைமரங்களும் சாகுபடி செய்யப்படாத தரிசு நிலமும் இன்றும் உள்ளன. கடந்த ஏழு மாதங்களில் யாழ். குடாநாட்டில் மொத்தம் ~0 000 வீடுகள் முற்றாக அல்லது பகுதியாக அழிந்துள்ளன.

வீடுகளில் எஞ்சி நிற்கும் சுவர்கள் பிளந்தும் கூரைகள் சாய்ந்தும் உள்ளன. சில ஜன்னல் பலகைகள் அப்படியே உள்ளன. பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது அது யானை விலையில் ஒரு லீற்றர் பத்து டாலராக விற்கப்படுகிறது இந்த விலையானது தென் பகுதி விலையை விடப்பத்துமடங்கு அதிகமானதாகும். கறுப்பு நிற A-40 கார்களும். மொறிஸ் மைனர்களும் யாழ்ப்பாண ஒழுங்கைகளில் கெட்டியாகத் தூரத் தள்ளி விடப்பட்டுள்ளன. இப்போது மாறிமாறிச் சைக்கிள்களில் 280 கி. மீ. தூரத்திலுள்ள வவுனியாவிலிருந்துமண்ணெண்ணெயும் மற்றும் அத்தியாவசியத் தேவைப் பொருள்களும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகின்றன. பெண்கள் என்னவோ கல்யாண வீட்டுக்குப் போகிறவர்கள போல திகைப்பூட்டும் சிவப்பு மற்றும் பொன்நிறச் சேலைகளைக் கட்டிக்கொண்டு சுவர்க்கலோகத்துப் பறவைகள் போல் சைக்கிள்களில் குறுக்கு பார்களில் குந்தியிருந்து பல கிலோ மீற்றர் தூர இடங்களுக்குப் பிரயாணம் செய்கிறார்கள்.

சூரியன் அஸ்தமித்ததும் அந்தகார வீதிகள் இருளில் மூழ்கிவிடும். மண்ணெண்ணெய் கொழும்பை விட யாழ்ப்பாணத்தில் பத்து மடங்கு விலை கூட விற்பனையாகிறது. தீப்பெட்டிகள் கடைகளில் கிடையாது 'பத்து மாதங்களாக இருட்டில்தான் வாழ்கிறோம்' என்று கூறும் திரு. குலசேகரம் 'எங்கள் பிள்ளைகளால் இனியும் படிக்க முடியாது' என்று அங்கலாய்க்கிறார். வங்கிகளுக்குத் தேவையை விடக் குறைவாகவே பணம் அனுப்பிவைக்கப்படுகிறது. தொலைபேசிக் கம்பிகள்எப்போதோ துண்டிக்கப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணத்துக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களில்

**மார்ச் 8,1991 ஏசியாவீக் சஞ்சிகையில் ஜூனியர்வெஸ்ட்எழுதிய கட்டுரையின் தமிழ் ஆக்கம் இது**

மூன்றிலொரு பகுதிதான்யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. போககுவரத்துச் செய்வதறகு அனுமதி கோரி மாதக்கணக்கில் லொறிகள் வவுனியாவில் தடுத்துவைக்கப்படுகின்றன. கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாண மக்களின் நுகர்வுக்குத் தேவையான உணவுவகைகளில் 3 வீகிதம்தான் வழங்கப்பட்டுள்ளதாக ஒரு அரசஅதிகாரி தெரிவிக்கிறார். 'மக்கள் சாவின் விளிம்பில் வாழ்கிறார்கள் அவர்கள் மெல்லச் சாகிறார்கள்'' இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார் செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன் கொழும்பிலிருந்து கப்பலில அனுப்பப்படும் உணவுப்பொருட்களும் காங்கேசந்துறைக்கோ அல்லது பலாலி முகாமைச்சுற்றியிருக்கும் ஆகாயக்காவல்... நடப்பதால் திரும்பிப் போய்விடுகின்றன. பெண்களுக்கான சுகாதாரக் குட்டைகளை நிறைய ஏற்றியபடி ஒரு கப்பல் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது. 'சுகாதாரக் குட்டைகள் (SANIPARYTOWELS) யாழ்ப்பாணத்தில் ஏராளமாக உள்ளன. எங்களுக்கு அவை தேவையில்லை மக்கள் ஒருநேரச்சாப்பாட்டுடன் வாழ்கிறார்கள். எங்களுக்கு வேண்டியதெல்லாம்உணவுதான்'' என்றார்ஒரு கன்னியாஸ்திரி

மக்கள் அதிகம கப்புழங்கும் விசாலமானயாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்துவகைகள் காயம் கட்டுவதற்குரிய துணிகள், அறுவை மருந்து உபகரணங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக ஒரு மருத்துவர் என்னிடம் தெரிவித்தார். ''பிராணவாயு இல்லாமல் அறுவைச் சிகிச்சைகள் தாமதமாகின்றன. பிராணவாயு தேவைப்படும் நோயாளிகளுக்கு தொடர்ந்தும் பிராணவாயு வழங்குவதற்கு எம்மிடம் பிராணவாயு இல்லை. இதனால் சிலநோயாளிகள் இறந்து போகிறார்கள்'' என்று மருத்துவர் தெரிவித்தார் ,105கட்டில்களில் அரைவாசிக்கட்டில்கள் குண்டுவீச்சுத் தாக்குதலினால் சேதப்பட்டு பாவிக்க முடியாத நிலையில் உள்ளன.

## மரபும் மாற்றமும்

சமூகக் கட்டுமானமும் மாறியுள்ளது. பெரும்பாலும மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும, துறைசார்ந்த நிபுணர்களும் கனடாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் புலம்பெயர்ந்து விட்டார்கள். கடந்த ஜூன் மாதம் முதல் 1 25 000 அகதிகள் தமிழ்நாடு சென்றதனால் தமிழ்நாட்டில் அகதிகளின் தொகை 2,00 000 மாக அதிகரித்துள்ளது; கொழும்பை விட அதிகமான தமிழர்கள் இப்போது லண்டன் பெருநகரப் பகுதியில்வாழ்கிறார்கள். யாழ் தீபகற்பத்தில் 2 50.000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இளைஞர்களைக் கொண்ட கெரில்லா இயக்க - புலிகள் அமைப்பு உருவாகியது. சற்று வயதான சில தமிழர்களுக்கு எல்லாவற்றையும்விட மிகஆச்சரியமானது தான. 'எங்கட பொடியள் சண்டைக்குப் போனபோது நாங்கள்அதிர்ச்சியடையவில்லை' என்கிறார் ஒரு அரச உத்தியோகத்தர். 'மரபு ரீதியாக எமது சமூகக்கட்டுமானம் மாறிவிட்டது'' என்று கூறும் கொழும்பிலுள்ள ஒரு தமிழ் வழக்கறிஞர், '35 வயதுக்குக் கீழ் உள்ளவர்தான் இப்போது ஆளும் வர்க்கம்'' என்கிறார். 'இந்த சட்டத்தையும் ஒழுங்கையும நாம்தான் நிர்வகிக்கிறோம். எமதுதான சிவில் நிர்வாகமும்'' நேசிக்கத்தக்க வரும் விடுதலைப் புலிகளின அரசியல் பேச்சாளருமான யுன்ரன் பாலசிங்கம் இவ்வாறு சொல்கிறார்.

புலிகளின நிர்வாகக் காரியாலயங்களில் குடும்பப் பிரச்சினைகள் கணிசமாக் சச்சரவுகளைத் தீர்க்கவும் மற்றும் வடக்கிற்கு வெளியில் செல்ல அனுமதிப் பத்திரம் பெறுவதற்காகவும மக்கள் காத்து நிற்கிறார்கள். ஆயுதபாணிகளான ஆளணியினர் உலவி வருகிறார்கள் ஆனால் சூழ்நிலை இயல்பாகவே உள்ளது. சீருடை அணிந்த இளைஞர்களும காரியமாற்றுகிறார்கள் தமமை அணுகி நிற்கும் சாதாரண மக்களும காரியாலயங்களில் ... அமர்த்தப்பட்டுள்ளார்கள்

''இப்போது வாழ்க்கை மிகவும் கஷ்டமாகி விட்டது'' என்கிறார் 38 வயதான நீலச் சேலை கட்டிய சரோஜினி என்ற பெண். மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய நிகழ்வு குறித்து ஒரு கண்ணோட்டம்

# கருணையினால் அல்ல

வடதமிழீழத்தில் இன்று ஒரு விடயத்தைக் குறிப்பாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேலைத்தேய நாடுகளில் வாழும் எமது இளைஞர்கள் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களைத்திருமணம்செய்து கொள்ள முன்வருவது - அதுவும் சீதனமில்லாமல். கொழும்புக்கு மணமகள் செல்வதற்கு வேண்டிய செலவு, பிரயாணம் நடைபெறும்வரைகொழும்பில் தங்குவதற்கான செலவு கடவுச்சீட்டு மற்றும் பிரயாணச் செலவு - இவையனைத்தையும் மாப்பிள்ளையும், மாப்பிள்ளை வீட்டாருமே ஏற்றுக்கொள்ளத்தயார். இவ்வாறான திடீர்க் கருணை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? இதற்கு முன் இருந்த நிலைமை தலைகீழாக மாறியது ஏன்?

இந்த நாடுகளுக்கான பிரயாணங்களைமேற்கொள்வதில் இருந்த தாராளத் தன்மை இறுக்கமடைந்து கெடுபிடிகள் ஆரம்பித்திருப்பதும் அதனைத் தொடர்ந்து தமது எதிர்காலம் பற்றிய அச்சம் இவர்களிடையே தோன்றியிருப்பதுமே பிரதானகாரணம் ஆகும். பாஸ்போர்ட், விசா என்பன தொடர்பாக விமானப் பயண நிறுவனங்கள் தீவிரமாக ஆராய்தல், கொழும்பின் ஊடாகத் தாங்கள் வந்து செல்லும்போது கட்டுநாயக்காவிலும், கொழும்பிலும் தமக்கு ஏற்படக்கூடிய விசாரணைகள் போன்றவை கொழும்புப் பிரயாணம் பற்றிய அவர்களின் ஆசையைப் போக்கிவிடுகிறது. அத்துடன் குறிப்பிட்ட நாடுகளில் அரசியல் காரணங்களைக் காட்டி அகதி அந்தஸ்துப்பெற்றவர்கள் திரும்ப இலங்கைக்கு வரமுடியாது. (இவர்கள் தமது பெறறோரைச் சந்திப்பது கூட இந்தியாவில் தான். தமிழ்நாட்டுக்குப் பெற்றோரை வரவழைத்து அவர்களுடன் சில நாட்கள் தங்குவது வழக்கம்.)

குடும்பத்தின் வறுமை காரணமாக இப்பொருளாதார அகதிகள் மேலைத்தேய நாடுகளுக்குச் சென்றிருந்தாலும் இவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் இந்த வாழ்க்கைக்குத் திரும்பிவரத் தயாரில்லை. (ஆளைக் கருக்கும் வெப்பிலையும், மின்சாரமில்லா வாழ்க்கையையும் இனி எப்படிச்சகிப்பது') ஆகவே நிரந்தரமாகவே அந்த நாடுகளில் வாழத் தீர்மானித்துள்ள இவர்கள் அடுத்து தமது எதிர்காலத் துணைவியர் யார் என்பதை நிச்சயம்செய்து கொள்ளவேண்டும். காலங்காலமாகவே குடும்பத்தில் அடக்கத்தின் சின்னமாக, முற்றுமுழுதாக ஆண்களிலேயே தங்கி வாழும் பெண்களைத்தான் தமது எதிர்காலத் துணைவியாகக் கற்பனை செய்துவைத்திருப்பது எமது இளைஞர்களின் பொதுவான வழக்கம். எனவே இவ்வாறாக வாழ்ந்து பழக்கப்பட்ட எம்மவர்கள் மேலைத்தேய வாழ்க்கைமுறையில் சுதந்திரமான எண்ணங்கள் - கருத்துக்கள் கொண்ட அந்த நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளத்

**றெக்கோ**

தயங்குகின்றனர். (அவர்களும் எமது இளைஞர்களைத் திருமணம்செய்வதை விரும்புவது இல்லை) அவ்வாறே திருமணம் செய்துகொண்டாலும் வாழ்நாள் முழுவதும் தாங்கள் தாழ்வு மனப்பான்மையுடனேயே வாழவேண்டும் என்ற சங்கடமான நிலைமை - எனவே எப்படியும் எமது நாட்டில் இருந்தே பெண்தேவை - கூடியவரை தமது குடும்பத்தினருக்கு அறிமுகமான இடங்களில் இருந்து.

தொடர்ச்சியான பொருளாதாரத்தடை, நாணயப் புழக்கமின்மை என்பன இவ்வாறான இளைஞர்களுக்குச் சீதனம் பேசித் திருமணம் செய்யும் நிலையைப் பெருமளவில் குறைத்துவிட்டது. அத்துடன் இவர்களைப்பற்றி அடிபடும் போதைவஸ்துப்பாவனை மற்றும் வியாபாரம்பற்றிய செய்திகளும் இவர்களுடைய மதிப்பைக் கணிசமானளவு குறைத்துள்ளன.

மணப்பெண்களைப் பெற்றவர்களைப்பொறுத்தவரை ஒரு பக்கம் பிரயாணக் கெடுபிடி, மறுபக்கம் சீதனக் கெடுபிடி - இந்த இரண்டுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை எனவே இந்நிலையில் தமது எதிர்காலம்பற்றிய அச்சம் மேலைநாடுகளில் வாழும் இளைஞர்களிடையேதோன்றியுள்ளமை இயல்பானதே இதன்விளைவே இவ்விளைஞர்களின் பெற்றோர் சீதனமில்லாமல் திருமணம் பேசும் பெரிய மனிதர்களாகக் காட்சியளிப்பது.

தமது நோக்கம் வெற்றிபெறவேண்டுமென்பதற்காக அவர்கள் கூறும் ஒரே வாக்கியம் 'சீதனம் நகை, நட்டு எதுவுமே தேவையில்லை குணம் நல்லாயிருந்தாச் சரி எண்டுதான் அவன் எழுதுறான். அதுதான் எங்களுக்கு நல்லாத் தெரிஞ்ச உங்களின்ர மகளைச் செய்துவைக்க விரும்பிறம்'' என்பதாகும்.

குணம் நன்றாக இருந்தால் போதும் என்ற காரணத்திற்காகத் தமது மகளைத் திருமணம் செய்ய வருகின்றார்கள் என்பதைக் கேட்டதும் பெண்ணின் பெற்றோர் அடையும் ஆனந்தத்திற்கு அளவில்லாமல் போய்விடும். அவர்களை மடக்க வேறு வார்த்தை தேவையில்லை. நாள்பார்த்துச்செய்து கொடுக்கப்பட்ட தாலியுடன் பெண் பிரயாணத்துக்குத் தயாராவாள். இதுவரை காலமும் திருமணத்தின்போது. அந்தச் சுபவேளையில மட்டுமே கழுத்தில் ஏறும் தாலி. இப்போதெல்லாம் மணப்பெண்ணுடனேயே போகிறது மாப்பிள்ளையை நோக்கி இவ்வாறாக ஒரு மணப்பெண் அங்கு சென்றவுடன அந்த விமான நிலையத்தை வட்டமிட்டுக்கொண்டிருக்கும் எமது இளைஞர்கள் மத்தியில் அது பரபரப்பாகிவிடும். 'இது ஆருக்கு வந்தது?'' இதுவே அவர்களது கேள்வி.

அதிர்ஷ்டலாபச் சீட்டில் வெற்றிபெற்றவர் நிலையில அப்பெண்ணுக்காகப் பணம் செலவழித்தவர் நிற்பார். ஏனையோர் அடுத்த விமானத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பர். இவ்விபரங்களின் சாராம்சம் அண்மையில் கொழும்புப் பத்திரிகையொன்றிலும் வெளிவந்திருந்தது

மொத்தத்தில் வெளிநாடுகளில் வாழும் இளைஞர்கள் எமது வறிய மணப்பெண்களுக்கு வாழ்வளிக்கவில்லை. இந்தப் பெண்கள்தான் அவர்களுக்கு வாழ்வு அளிக்கின்றார்கள் என்பதேபொருத்தமானதாகும்.

## மனித வாழ்வு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுச் சேற்றை அகற்றுவதற்கு மாணிக்கம் முயன்றுகொண்டிருந்தான் குளிர் காற்று ஆட்களற்ற வெறுமை மனதில் ஒரு விதமான பயத்தை விதைத்துக் கொண்டிருந்தது.

''எங்கட அமைதியான வாழ்க்கை ஏன் இன்று சிதைஞ்சு போச்சுது. தமிழராகப் பிறந்தா இதுதான் வாழ்க்கையா—வேதனையிலையும் — கண்ணீரிலையும். இண்டைக்கோ நாளைக்கோ சாகிறம் எண்டு தெரியாமல், சீ இந்த வாழ்க்கை மாற்றப்பட வேணும் நிச்சயமா மாறும், பெடியள் இருக்கிறாங்கள்'' மாணிக்கம் உறுதியுடன் நிமிர்ந்தான்.

அந்த நேரம், ஆனையிறவுப் பக்கமாக ஒரு இயந்திரத் துப்பாக்கி சிறிது நேரம் அடித்தோய்ந்தது. ஏதோவொரு காவலரண்பக்கமாக வெளிவர முயன்ற இராணுவத்தினரை அந்தரவைகள் தடுத்து நிறுத்தி இருக்கும். இந்தச் சாமத்திலும் இந்த மண்ணைக் காக்க இந்தத் தேசத்தின் புதல்வன் ஒருவன் விழித்திருக்கின்றான்.

மாணிக்கம் எழுந்து நடந்தான். பின்னால் சிலர் வந்துகொண்டிருந்தார்கள். மழை சாதுவாக துமிக்கத் தொடங்கியது. அவர்கள் வேகமாக ஒதுங்க இடந்தேடி நடக்கத் தொடங்கினர். சில கணங்களிலேயே எதிர்ப்பக்கமாகப் பெரும் இரைச்சலுடன் வந்த மழை எல்லோரையுமே தாராளமாக நனைத்தது. இப்போது அனைவருமே மெதுவாக நடக்கத் தொடங்கினார்கள். மாணிக்கத்திற்கு உதவியாக இரு இளைஞர்கள் சேர்ந்து கொண்டார்கள்.

மழைஓய்ந்தபொழுது. அவர்கள் ஒருவாறாக அந்தச் சேற்றுப்பாதையை விட்டு வீதியில் ஏறினார்கள். மாணிக்கம் இருளுக்குள்ளும் அந்த இளைஞர்களின்முகங்களைத்தேடினான். போயிட்டுவாறம் என்று கூடச் சொல்லாமல்அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

தோள்களில் துப்பாக்கிகள்......

சிறிது தூரத்தில் தேனீர்க் கடைகள் கலகலப்பாக இருந்தன—மக்கள் கூடி இருந்தனர். கொத்துரொட்டிக் கடைக்காரன் ஒருவன் யாரோ மீதான கோபத்தைத் தகரத்தில் காட்டிக்கொண்டிருந்தான். மாணிக்கத்திற்கு உடல் குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது. மனது ஆறுதலாக இருந்தது. தேனீர்க் கடைக்குள் சென்றவன் தேனீர் ஒன்றும்—இரண்டு உழுந்து வடைகளையும் சாப்பிட்டான். அநியாய விலைதான் என்றாலும் அந்த இடத்தில் கடை போட்டதற்காக. அந்தக் கடைக்காரனுக்கு நன்றி சொல்ல வேண்டும் போலிருந்தது. வெளியே வந்தான்..

மிதிவண்டியின் முன்பக்கமாகத் தொங்கிய ஓலைப் பையில், 'பொலித்தீன்' பைபால் சுற்றப்பட்டு சவர்க்காரங்கள் நனையாமல் கிடந்தன.

'அப்பா எனக்கு ரெண்டு சவுக்காரம் கொண்டுவாங்கோ' மகளின் நினைவுடன் பின் பக்கம் சென்றான். கறுப்பு பொலித்தீனால் போர்த்தப்பட்டு மூடையில் அடுக்கப்பட்ட பொருட்கள் சிதையாமல் கிடந்தன.

''இந்த முறை ஏதேனும் மிஞ்சினால், ரெண்டு பிள்ளைகளுக்கு எண்டாலும் உடுப்பெடுக்கவேணுமப்பா'' பார்வதியின் ஆசைகளை நினைத்தபடியே நிமிர்ந்தான். வவுனியாவிற்கு போவதற்காக ஐந்தாறு மிதிவண்டி வியாபாரிகள்,

''அண்ணை, இந்தப் பாதை எப்படி போகலாமே'' அவனிடம் தான் கேட்டார்கள். ''கஸ்டம்தான்- ஆனால் ஏலாதெண்டு ஒண்டும் இல்லைத் தம்பியவை.போகலாம்''மாணிக்கத்தின் மிதிவண்டி தொடர்ந்து- இப்போது புதிய வினோதமான சத்தங்களையும் சேர்த்துப்போட்டுக்கொண்டே சற்று வேகமாகஓடத்தொடங்கியது.

## அயடீன்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்து குறைவென்று கருதலாம்.

(ஆ) அயடீன் பூசப்பட்ட இடம் கஷ்டப்பட்டுக் கண்டுபிடிக்க வேண்டி இருந்தால் – இதுவும் அயடீன் பற்றாக் குறையையே காட்டுகிறது. அயடீன் உப்புதேவை என்று அர்த்தமாகும்.

(இ) கொஞ்சம் மங்கியும் ஆனால் இலகுவில் கண்டுபிடிக்கக்கூடியதாகவுமிருந்தால், உடலிலுள்ள அயடீனின் அளவு போதுமென்று கருதலாம்.

(ஈ) இரவு பூசப்பட்ட அயடீன் உப்பின் நிறம் விடியற்காலையிலும் அதேபோன்று நிறம்மாறாதிருப்பின், உடலிலுள்ள அயடீனின் அளவு போதுமானதெனக் கொள்ளலாம்.

(உ) அயடீன் உப்பின் நிறம் கறுப்பாக மாறினால், உண்ணுகிற உணவில் அலர்ஜி இருக்கிறதென்று அர்த்தப்படும்.

(ஊ) அயடீனின்நிறம் நீண்ட நாட்களுக்கு நிலைக்குமாயின் உடலின் அயடீன் சத்து அதிகரித்துவிட்டதென அர்த்தமாகும்.

---

## யாழ்ப்பாணம்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவரது பதினான்கு வயது மகன் புலிகள் அணியில் சேர்ந்துள்ளான். 'உணவைப் பற்றி நாம் இப்போது அதிகம் கவலை கொள்வதில்லை. எமக்கு வேண்டியது சுதந்திரம் என்கிறார் சரோஜினி.

உண்மையில், விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பெரிய குடும்பத்தைப் போன்றது. யாழ்ப்பாணத்து மக்கள் அநேகரின் உறவினர்கள் புலிப்படையில் இருக்கிறார்கள். அவர்கள் புலிகளை ''எங்கட பொடியங்கள்'' என்றழைக்கிறார்கள். துறவிகளைப் போன்ற கடுமையான கட்டுப்பாடு வியக்கத்தக்கது. குறிப்பிட்ட கால சேவை முடிந்து, ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பிறகுதான் திருமணம். புலிகள் குடிப்பதுமில்லை; புகை பிடிப்பதுமில்லை. புலிகள் சமூக அமைப்பில் பெண்களின் அந்தஸ்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்து, பெண்களுக்கு போராளிகளாக சம உரிமை வழங்கியுள்ளார்கள். சாதியையும், சீதனமுறையையும் ஒழிக்கப் பிரயத்தனம் செய்கிறார்கள்.

---

வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
சமாசத்தின் சுகாதார வாரம் பற்றிய

## அறிவித்தல்

ஏற்கனவே எம்மால் தெரிவிக்கப்பட்டமைக்கமைய 7. 2. 92 இன்று சங்கங்களில் நடைபெறும் சிரமதான நடவடிக்கைகளை பார்வையிட எமது சார்பில் வரும் குழுவினருக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து உதவவும்.

கி. சிவனேசன்,
பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
(சி/3893)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கீதா ஆபரண மாளிகை உரிமையாளர்

### அமரர் இராசையா கந்தசாமி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23- 5· 1949 | 10- 01- 1992 |

திதி: 8 02- 1992 சனிக்கிழமை

பாசமிகு தந்தையாய் பாரினில் திகழ்ந்தீரே
நேசமுடன் வளர்த்தெம்மை நீடுலகில் - தேசுடனே
அன்பான எமை விட்டு அரனடியே சேர்ந்தீரோ
நின்பாதம் பணிகின்றோம் நினைந்து!

அந்தியேட்டி கிரியைகளில் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மீனாட்சி அம்மன் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்

(2185)

---

கிளிநொச்சி மாவட்ட
விவசாயிகள் கவனத்திற்கு
நீர்ப்பாசனத் திணைக்கள

## அறிவித்தல்

எனது பிரிவின்கீழ் பராமரிக்கப்படும் கீழ்வரும் குளங்களில் நீர்விநியோக பராமரிப்பு வேலைகளை திறம்பட செய்விப்பதற்கு அந்தந்த குளங்களின்கீழ் விவசாயம் செய்யும் கமக்காரர்கள் அடங்கிய ''கமக்காரக் குழுக்கள்'' (Farmers Organization) தெரிவு செய்ய வேண்டியுள்ளதால் தயவு செய்து இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்ட இடங்களில் கூடி உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| குளத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. புதுமுறிப்பு | புதுமுறிப்பு நீர்ப்பாசன விடுதி | 20. 02. 1992 | காலை 8.30 |
| 2. கனகாம்பிகைக்குளம் | இரணைமடு நீர்ப்பாசன விடுதி | 21. 02. 1992 | காலை 8.30 |
| 3. பிரமந்தல் ஆறு | பிரமந்தல்ஆறு நீர்ப்பாசன விடுதி | 24. 02. 1992 | காலை 8.30 |
| 4. கல்மடு ) | | | |
| 5. பெரிய ) குளம், ) கண்டாவளை ) | கல்மடு நீர்ப்பாசன விடுதி | 24. 02. 1992 | காலை 10.30 |

வில்சன் வீதி,
கிளிநொச்சி.
05. 02. 1992

எந்திரி சு. சிவகுமார்
நீர்ப்பாசன எந்திரி
கிளிநொச்சிப்பிரிவு.
(சி/3895)

---


பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 93 புதிய பிரிவு

பொருளியல் - வரதராஜன்
அளவையியல் – S. S. மனோகரன்
கணக்கியல் < சௌந்தி / யோகராஜா
வர்த்தகம் - பிரபல ஆசிரியர்
இந்துநாகரிகம் - அருள்நங்கை
தமிழ் - மீரா
புவியியல் - ஜோசப்
அரசியல் - பஞ்சு

ஆரம்பம் 8-2-92
6.30 a.m

A/L 92 Day Classes

பொருளியல் - வரதராஜன்
கணக்கியல் - சௌந்தி
வர்த்தகம் - பசில்
இந்துநாகரிகம் / தமிழ் > அமரசிவம்
அளவையியல் - பிரபல ஆசிரியர்

ஆரம்பம் 11-2-92
8.00 a.m

(சி/3894)

# பிரேமதாசா
## எப்படிப்பட்ட மனிதர்?

கருத்தொற்றுமை என்ற நடைமுறைக்கு ஒவ்வாத அரசியல் தத்துவத்தின் கீழ் அனைத்து கட்சிகளுக்கும் மேடையமைத்துக் கொடுத்து, புலிகளை அந்நியமாக்கிவிட பிரேமதாசா மேற்கொண்ட சூத்திரதார முயற்சிகள் கொழும்பு பேச்சுகளை முடமாக்கியது. ஒரு குறைந்தபட்ச இடைக்கால தீர்வைத்தானும் வழங்குவதற்கு பிரேமதாசா தயாரில்லை என்பதை புலிகள் உணர்ந்து கொண்டனர்.

இது ஒருபுறமிருக்க வடகிழக்கில் சிங்கள ஆயுதப்படைகளின் அடாவடித்தனங்களும் அதிகரித்த தென்னிலங்கையில் விஜவீராவின் செம்படைகளை வேரோடு வெட்டி வீழ்த்திய இறுமாப்பில் சிங்கள இராணுவம் புலிகளுடன் சீண்டத் தொடங்கியது. பனிப்போர் தீவிரமடைந்து நிஜப்போர் வெடிக்கும் ஆபத்து எழுந்தது. கிழக்கிலங்கையில் நிலைமை மோசமடைந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள காவல்துறையின் எண்ணிக்கையை குறைக்குமாறு புலிகள் கேட்டுக்கொண்டனர். ஆனால் அதற்கு மாறாக சிங்கள பொலிஸாரின் எண்ணிக்கை கூட்டப்பட்டது. சிங்கள காவல்துறையினர் தமிழர் மீது தாக்குதல்களை நடத்த முஸ்லிம் தீவிரவாத ஜிகாத் இயக்கம் புலிகளின் ஆதரவாளரை கொன்று குவிக்க, இராணுவம் புலிகளுடன் மோத வன்முறை கட்டுக்கடங்காமல் வெடித்துப் பரவி போர்வடிவம் எடுத்தது. இராணுவம் ஒத்துழைக்கத் தவறியதால் போரை நிறுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டன.

இராணுவம் யுத்தத்தை விரும்பியது. இந்திய தலையீட்டினால் ஏற்பட்ட இடைவெளியில் ஆட்பலம், ஆயுதபலத்தால் கொழுத்துப் பருத்து திமிர்பிடித்த சிங்கள இராணுவம் முகாம்களுக்குள் முடக்கிக்கிடக்க விரும்பவில்லை. புலிப் படை பற்றியும் தவறாக மதிப்பிட்டது. இரண்டரை ஆண்டுகளாக உலகின் மிகப் பெரிய இராணுவத்துடன் கொடும் யுத்தம் புரிந்ததால் புலிகள் பலவீனமடைந்திருக்கலாம் எனக் கணிப்பிட்டது. விஜயவீராவின் பகுதிநேர புரட்சிவாதிகளுடன் வீரவேங்கைகளை ஒப்பிட்டது. இந்தப் பிழையான கணிப்பீடுகளுடன் இராணுவம் போரில் குதித்தது.

பிரேமதாசா புலிகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார். பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டதாக பழி சுமத்தினார். முதுகில் குத்திவிட்டதாக முறைப்பட்டுக் கொண்டார். பிரேமதாசாவின் வசைபாடலுக்கு பக்கவாத்தியம் வாசிப்பதுபோல தென்னிலங்கைப் பத்திரிகைகளும் புலிகளைச் சாடின. தூங்கிக் கிடந்த சிங்கள தேசத்தைப் பேரினவாதப் போர்ப்பறை தட்டி எழுப்பியது. புலிகளுடன் எழுந்த முரண்பாடு தமிழினத்திற்கு எதிரான யுத்தமாக விஸ்வரூபம் எடுத்தது.

தொலைபேசித் தொடர்புகள் அறுக்கப்பட்டு வடக்கு துண்டிக்கப்பட்டதால் புலிகளின் ஆட்சேபக் குரல் தென்னிலங்கைக்கு கேடகவில்லை. போதாக்குறைக்கு இந்தியாவும் புலிகளின் தொலைத்தொடர்பு 'செட்'டுக்களை மௌனமாக்கியது. இதனால் வெளியுலகிற்கு அரசின் அபசுரங்கள் மட்டும் கேட்டது.

பிரேமதாசாவுக்கு பிரசாரம் கைவந்த கலை. கருத்து உற்பத்தி சாதனங்களைக் கையாளுவதில் அவர் ஒரு வித்தகர். யாருக்கு எந்த நேரத்தில், எப்படியான மகுடி ஊத வேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரியும். அத்துடன் சிங்கள சமுகப் பிரச்ஞையின் அடிமனக் கோலங்களையும் அவர் அறிவார்.

போதிசத்துவர் போதித்தார்.

நன்மை, தீமை என்ற இரு சக்திகளின் போராட்டமாகவே இந்த யுத்தம் நடக்கிறது. நன்மையின் திருவடிவமாக இராணுவமும், தீமையின் பேயுருவமாக புலிகளும் இந்த யுத்தத்தில் சமரிடுகின்றனர். இது ஒரு தர்ம யுத்தம்- அதர்மத்திற்கு எதிரான இந்த யுத்தத்தில் தர்மத்தின் காவலனாக அரசு செயற்படும். இப்படியான ஒரு தத்துவ விளக்கம் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்தத் தத்துவார்த்தப் பார்வையில் தீமையின் குறியீடு ஒருபுறம் புலிகளையும் மறுபுறம் தமிழர்களையும் குறித்து நின்றது. சிங்கள இனத்தின் இரண்டாயிரம் ஆண்டுகால தர்ம 'யுத்தத்தின்'ஒரு தொடர்ச்சியான வெளிப்பாடாகவும் இந்தப் போர் சித்தரிக்கப்பட்டது.



பிரேமதாசா ஒருயுத்தத்தை விரும்பினார். தமிழ் தேசத்திலும், சிங்கள தேசத்திலும் பெருவெள்ளம்போல பிரவாகமெடுத்த பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாது திணறிய அவருக்கு ஒருயுத்தம் தேவைப்பட்டது. தென்னிலங்கையில் ஓடிய இரத்த ஆறு காய்ந்துவிடவில்லை ஜே.வி.பியின் கல்லறைகளுக்குள் புரட்சியின் துடிப்புகள் அடங்கிவிடவில்லை. மண்டை ஓடுகளைத் தேடி மக்கள் ஆவேசம் கொண்டு அலைந்தனர். நீறுபூத்த நெருப்பாக தென்னிலங்கை வெந்தது. வடக்கே தமிழர் தன்னாட்சிகோரி ஆயுதம் ஏந்தி நின்றனர். இருமுனைகளிலும் எழுந்த நெருக்குதல்களைச் சமாளிப்பதற்கு யுத்தம் தேவைப்பட்டது. சிங்கள தமிழ் தேசங்கள் மத்தியிலான ஒரு யுத்தம் அவசியமாகியது. சிங்கள மக்களின் ஆவேசத்தை திசை திருப்பவும், தமிழரின் சுதந்திர எழுச்சியை நசுக்கவும் யுத்தம் ஒரு சிறந்த மார்க்கமாக அமைந்தது. சிங்களத் தேச பக்தர் என்ற முகமூடியை அணிந்து கொண்டு தர்மத்தின் தளபதியாக யுத்தத்தை தொடர்ந்தார் பிரேமதாசா.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வென்றுவிடுவது சாத்தியமில்லை என்ற எதார்த்த உண்மையை பிரேமதாசா நன்கறிவார். இந்திய அனுபவம் இந்தப் பாடத்தை அவருக்கு புகட்டியிருக்கும். இந்திய இராணுவப்பூதம் சாதிக்க முடியாதது ஒன்றை சிங்கள இராணுவம் சாதித்துவிடும் என அவர் எண்ணிவிடவில்லை. புலிப்படையின் இராணுவ சாணக்கியம் பற்றியும் அவருக்கு நன்கு தெரியும். பிரபாகரன்மீது அவருக்கு ஒரு அலாதியான மதிப்பும் அதேவேளை அச்சமும் இருக்கத்தான் செய்தது.

சிங்கள இராணுவம் ஒரு கட்டுப்பாடான அமைப்பாக இயங்கவில்லை என்பதை புலிகளுடன் நடத்திய அந்தரங்கப் பேச்சுக்களின் போது பிரேமதாசா ஒப்புக் கொண்டிருக்கிறார். தலைசிறந்த கட்டமைப்பும், கட்டுக்கோப்பும் உடைய ஒரு விடுதலை இராணுவத்தை பிரபாகரன் எப்படி உருவாக்கினார்? எப்படி அதனை தலைமை தாங்கி வழிநடத்துகிறார்? என்பதுபற்றிஎல்லாம் பிரேமதசா மிகவும் வியப்புடன் விசாரிப்பார்.

விடுதலைப் புலிகளின் தலைமை, அதன் இராணுவக் கட்டமைப்பு, புலிகளின் போராட்ட திறன், இலட்சியப் பற்று- இவைபற்றி எல்லாம் பிரேமதாசா நன்கறிவார். இதனால் ஒரு யுத்தத்தில் புலிகளை அழிப்பதோ அல்லது புலிகளின் தலைமையை பணியவைப்பதோ முடியாத காரியம் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆனால் அவருக்கு யுத்தம் தேவைப்பட்டது. தமிழரின்

**பிரம்மஞானி**

இனப்பிரச்சினையைத் தட்டிக்கழிக்கவும், தனதுபதவியை கெட்டியாகப் பற்றிக் கொள்ளவும், தென்னிலங்கையில் புரட்சிகர எழுச்சிகளை திசை திருப்பவும் பிரேமதாசாவுக்கு யுத்தம் ஒரு நிர்ப்பந்தமாக, ஒரு மாற்றுவழியாக, ஒரு தேவையாக எழுந்தது.

(தொடரும்)

# தமிழரைக் கொல்வதினால் இனப்பிரச்சினை தீராது

—சந்திரிகா குமாரணதுங்க



இனவாதத்தை தூண்டி அப்பாவித் தமிழ் மக்களை அநியாயமாகக் கொலை செய்வதன் மூலம் ஒருபோதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

இவ்வாறு திருமதி சந்திரிகா குமாரணதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை மாத்தறை சிறிலங்கா மத்திய காரியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார் இவ்வைபவத்தில்சந்திரிகா மேலும் கூறியதாவது: அன்று எந்த வழியிலாவது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று போராடியவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும், உணர்வுகளையும் மதித்து அவற்றை நிறைவேற்றிக் கொடுத்திருந்தால் இன்று இந்த நெருக்கடிகளும் வீண்யுத்தங்களும் நடந்தே இருக்காது

இன்றைய அரசாங்கத்திற்கு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. படைபலத்தை வைத்துக் கொண்டு கட்சியை நடாத்தினால் போதும் என்ற எண்ணமே ஆட்சியாளர்களிடம் உள்ளது.

1971 இல் நாட்டின் பாதுகாப்பு படையில் 5,000 பேரே இருந்தனர். ஆனால் இன்று ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தின் இதயமான பொதுநூல் நிலையத்திற்கு தீ வைத்து நாசமாக்கியோரையும் அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்தவர்களையும் இன்று பொதுமக்கள் இனம் கண்டுள்ளனர்.

மிக எளிதாக தீர்க்கப் படவேண்டியஇனப்பிரச்சினையை முன்னைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அன்றைய முக்கிய அமைச்சர் சிறில் மத்யூவும் அன்று பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவும் பூதாகரமாக்கி விட்டார்கள். அவர்கள்தான் இன்றைய இப்பிரச்சினைகளுக்கு ஜவாப்தாரிகள் எனவும் தெரிவித்தார்.

## மாவீரர் தகவல் தர பகிரங்க வேண்டுகோள்

எமது மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காகப் போராடி தம் இன்னுயிர்களை அர்ப்பணித்து மாவீரர்களானோர் தாயகத்தின் வெளிச்சங்களாய் ஆனவர்கள்.

இன்று கல்லறையிலே உறங்கினாலும் இவர்களின் இலட்சியங்கள், கனவுகள், வரலாற்றுச் சாதனைகள் என்றுமே வாழ வேண்டும்.

அதற்காக இந்த மண்ணில் சரித்திரமாகி விட்ட வரலாற்று நாயகர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி எங்கள் தாயகத்தின் மடியிலே தவழவிட மாவீரர் வரலாற்றுப் பதிவேட்டுச் செயலகம் எண்ணியுள்ளது.

எனவே உங்களோடு பழகிய மாவீரர் எப்படியான சுபாவம் உடையவர். அவரது ஈடுபாடுகள் எத்தகையது? அவர் செய்த சாதனை எத்தகையன? அவரிடமுள்ள சிறப்பம்சங்கள் என்னென்ன? அவர் என்ன பேசினார்? எப்படிப் பேசினார்? எப்படிப் பழகுவார்? என்பவற்றுடன் குறிப்பிடும் படியான நிகழ்வுகள் அனைத்தையும் விபரமாகத் தொகுத்து நேரிலோ. அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்கும்படி மாவீரர் பதிவேட்டுச் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அநாதரவான நிலையில் வயோதிபரின் சடலம்

(சாவகச்சேரி)

வேம்பொடுகேணி இத்தாவில் பாடசாலைக்கு முன்பாக உள்ள பஸ்நிலையத்தில் இருந்து இனம் தெரியாத வயோதிபரின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பளை அரசினர் மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்களை அடையாளம் காணுமாறு சாவகச்சேரி காவல்துறை பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். இறந்த வயோதிபரின் அருகில் வெற்று நஞ்சுப் போத்தல் ஒன்று காணப்படுவதால் இவர் நஞ்சருந்தி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது, 60 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலத்தின் அருகில் மேசன் வேலைக்குரிய ஆயுதங்கள் காணப்படுகின்றன. 5அடி 7 அங்குல உயரமுடைய இவரது தலைமயிர் நீண்டு நரைத்துள்ளது. கொம்பு மீசையும் இடக்கண்ணின் கீழ் உண்ணி ஒன்றும் காணப்படுகின்றது.

இவரது முதுக, மார்பு, கைகளில் பச்சை குத்தப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன. இதில் முன்னங்கை பட்டையில் சிலுவையில் அறைந்த யேசுவின் படம் சித்திரமாக வரையப்பட்டுக் காணப்படுகின்றது. இவரை அடையாளம் காணுமாறு பொது மக்களைக் காவல்துறைப்பணிமனை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## திறமையின் அடிப்படையில் ஆசிரியர்கள் தெரிவு

(சளுத்துறை) -ஜோர்ஜ் மென்டிஸ்

ஆசிரியர்கள்கல்வித்தகைமை மற்றும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்கள். தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு 12,000 விண்ணப்பதாரிகள் உள்ளனர். இப்போதைக்கு மாவட்ட அடிப்படையில் 8000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு கல்விச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் களுத்துறையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்களைக் கையளிக்கும் வைபவத்தில் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்கள் ரூபா 1300 சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள். நாலு வருட காலத்தில் இவர்கள் படிப்பை மேற்கொண்டு தமது கல்வித் தராதரத்தை விருத்தி செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

## கலந்துரையாடல்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிககு யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சகல பிரிவுச் செயலாளர்களுக்கும், கிராமசேவை அலுவலாகளுக்குமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலுக்குச் சகலரையும் சமுகமளிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆயுதம் கையளிக்காதவரை புலிகளுடன்யுத்தம் நீடிக்கும்

**- டி. பி. விஜயதுங்கா**

(கொழும்பு)

தொண்டமான் அல்ல எவர் கூறினாலும் புலிகளை இனி மேலும் நம்பமுடியாது. அவர்கள் ஆயுதங்களைக் கையளிக்க முன்வராத வரையிலும் யுத்தம் தொடரும் என்று பாதுஇராஜாங்க அமைச்சரும், நிதி அமைச்சரும், பிரதமருமான டி. பி. விஜயதுங்கா கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் சூளுரைத்தார்.

உடுநுவர பட்னா கொட ராஜமகா விகாரையில் மூன்றாம் திகதி நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசிய டி. பி. விஜயதுங்கா மேலும் பேசுகையில் புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிடார்தவரை மாற்றுவழிகளைக் கையாள வேண்டும். புலிகளின் சக்தியை நாம் மிக விரைவில் பலவீனப்படுத்துவோம். புலிகள் சரணடையும் காலம் வெகுதூரத்தில்இல்லை ஒவ்வொருவரும் தத்தமது அரசியல் நலன்கருதி பலரும் மேடையில்பலவாறு பேசலாம். இவ்வாறான பேச்சுக்கள் ஈழ இராச்சியம் கோரும் புலிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கிடலாம் அவ்வாறான சம்பவங்களுக்கு நாம் இடமளிக்கலாகாது எனவும் குறிப்பிட்டார்.

## மூன்று வார மோதலில் 82 இராணுவம் பலியாம்

(கொழும்பு)

கடந்த மூன்று வாரங்களில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 82 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் இது அண்மைக்காலங்களில் மிக அதிகமான இழப்பு என்றும் சிறிலங்கா இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

1990 யூன் முதல் இதுவரை 1555 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## சிறிலங்கா அரசாங்கம் ராணுவத்தில் தங்கியுள்ளது

சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்திலேயே பெரிதும்தங்கியுள்ளது என்று அமெரிக்காவின் மனித உரிமை விவகாரங்களுக்கான செயலாளர் றிச்சேர்ட் சூட்டர் வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மிகவும் கஷ்டமான நிலையை சிறிலங்கா அரசாங்கம் எதிர்நோக்கி வருகின்றது. இனப் பிரச்சினை தீர்க்கப்படாமையினாலேயே இந்த நிலை நீடிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## உங்களுடையதா?

திருநெல்வேலிச் சந்தையிலுள்ள மிதிவண்டி பாதுகாப்பு நிலையத்தில் தங்க நகையொன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## சைக்கிள்இலக்கத் தகடு விநியோகம்

(ஈச்சமோட்டை)

1992 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டிக்குரிய இலக்க தகடுகள் யாழ். மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டுக்குரிய ரூ. 12. 50 சதத்தை பணமாக செலுத்தி இலக்க தகடுகளை பெற்றுகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (43)

## இராணுவம் தாக்கி தும்பங்கேணியில் 2 பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தும்பங்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த பரிதாப சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 6. 30 மணியளவில் நடைபெற்றது.

வயல் வேலைக்கென சென்று கொண்டிருந்த பொதுமக்களின் மீதே இராணுவத்தினர் பற்றைக்குள் பதுங்கியிருந்து சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்ததாக தெரிய வருகிறது.

பின்னர் 20 பொது மக்களை கைது செய்து களுவாஞ்சிக்குடி முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

## லெப். கேணல் வேணு நினைவஞ்சலிக் கூட்டம்

நேற்று நடைபெறவிருந்த லெப். கேணல் வேணுவின் நினைவஞ்சலிக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால்நேற்றுநடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் இன்று மாலை 7 மணியளவில் கோப்பாயில் நடைபெறவுள்ளது.

## இராணுவ சுற்றிவளைப்பில் திருமலைக் கிராமங்கள்

### சூட்டிற்கு ஒருவர் பலி; பலர் காயம்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கண்டல்காடு, வைராவெளி, மணலாறு ஆகிய பகுதிகள் கடந்த 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை சிறிலங்கா இராணுவத்தினால் தொடர்ச்சியாக சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. இந்தச் சுற்றிவளைப் பின்போது இராசலிங்கம் யோகராசா (ஆலங்கேணி வயது 45) என்னும் அப்பாவி தமிழ்மகன் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜோசப் இந்திரன் (வயது 19), வேலாயுதம் பூபால் (வயது 35), கந்தையா ரங்கநாதன் (வயது 25) ஆகிய மூவரும் சுட்டுக் காயப்படுத்தப்பட்டனர். காளிக்குட்டி வைரமுத்து (வயது 40) என்பவர் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இதேவேளை சம்பூர், கிளிவெட்டி பகுதிகள் தொடர்ந்தும் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் உள்ளன.

### மூன்று

கொண்டனர். இந்த தாக்குதல் நேற்று முன்தினம் இரவு 12.15 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது. 30 நிமிடம் இடம்பெற்ற இந்த துணிகரத் தாக்குதலில மூன்றுஇராணுவ காவலரண்கள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. ஒருஇராணுவ கப்டன் உட்பட ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் பலியாகினர். மூவர் படுகாயமடைந்தனர். காவலரணில் இருந்த ஏனையோர் முகாம்களுக்கு தப்பி ஓடி விட்டனர். காவலரண் பகுதியிலிருந்து ஐந்து நவீனரக துப்பாக்கிகளும் பல இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

### வீரச்சாவு

ஐயனார் (நாகசாமி மகேந்திரன்- சாளம்பைக்குளம் வவுனியா), வீரவேங்கை வினோதன் (செல்வராசா சந்திரகுமார்-கற்சிலைமடு முல்லைத்தீவு) ஆகிய இருவரும் வீரச்சாவைத்தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மூன்றாவது

வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புறப்படுவதாக இருந்த இந்தக் கப்பல் எஞ்சின் கோளாறு காரணமாக தனது பயணத்தை ஒரு நாள் ஒத்திவைத்தது. இக்கப்பலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடலோர காவற்படை கவனித்துக் கொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் பத்து நாட்களில் மேலும் ஐந்நூறு பேர் தலைன்னாரிற்குக் கொண்டு வந்து இறக்கப்படவுள்ளனர். அகதிகளைத் திருப்பி அனுப்பும் வேலைகளைக் துரிதப்படுத்துவதற்காக இந்திய அரசு பெரிய வள்ளங்களையும் பயன்படுத்தவுள்ளது.

தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள அகதிகளை மட்டுமே இலங்கைக்குத் திரும்பி வர இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை அகதிகள்புனர்வாழ்வுத்துறைத் தலைவர் கிறிஸ்ரி சில்வா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் ஆதரவில்
நாடக அரங்கக்கல்லூரி தயாரித்தளிக்கும்
**‘உயிர்த்த மனிதனின் கூத்து’(நாடகம்)**
மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சனிக்கிழமை
(08-02-92) மாலை சரியாக 7·00 மணிக்கு
நடைபெறவுள்ளது.
**அன்பளிப்பு 10.00 ரூபா**
(2193)) விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கரையோரப்பகுதிகளில் கடற்படை தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடா கரையோரப் பகுதிகளை நோக்கி சிறிலங்கா படையினரின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன நேற்று முன்தினம் தொடக்கம் கீரிமலை, திருவடிநிலை, சுழிபுரம் வடமராட்சியின் கரையோரப்பகுதிகள் மீது பலத்த பீரங்கித்தாக்குதலையும் துப்பாக்கிச்சூட்டையும் மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை நேற்று பூநகரி, கல்முனை பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். அத்துடன் நேற்றுக் காலை 7 மணியளவில் அரியாலை கிழக்கு பகுதியை நோக்கி எறிகணை தாக்குதல்களும் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது. [82][ச]

## கராட்டி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் கராட்டி பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன. இந்த பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ். கனகரத்தினம் ம.ம வித்தியாலயத்தில் பெயர்களை பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் நடைபெறும்.

## மயங்கிக் கிடந்த நபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மயங்கிய நிலையில் வீதியில் கிடந்த நாற்பது வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று இரவு ஒன்பது மணியளவில் துவிச்சக்கரவண்டியின் அருகில் மயங்கிக் கிடந்த நீளக் காற்சட்டை அணிந்திருந்த இவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கஅதிகாரிகள் போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ச)

### மாணவரை

அண்மையில் டி. சில்வா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இச் சிறுவர்களைக் கடத்திச் சென்றவர்கள் அரச படைகளே என்பதை நிரூபிக்க போதிய ஆவணங்கள் இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக விரைவில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும் என தான் நம்புவதாக வழக்கறிஞர் ரஞ்சித் அபயசூரிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால் இதுகுறித்து அரசு கருத்து எதுவும் வெளியிடவில்லை.

### சிறிலங்காவிற்கு

ளுக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அமைப்புக்கள் நேரடியாக வழங்கும் உதவிகளை நிறுத்துமாறு கனேடிய அரசாங்கம் அந்நிறுவனங்களை வற்புறுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று பாரிஸில் நடைபெற இருக்கும் சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராயப்படும் எனவும் ஆனால் பெரும்பாலும் சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்க அந்த நாடுகள் தயாராகவே இருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா அரசு 32 ஆயிரம் கோடி இலங்கை ரூபாக்களை கடனுதவியாக பெற முயற்சி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### பேச்சுவார்த்தை

சனையுடன் கவனத்திற் கொள்ளுமாறு மாநாடு கேட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசுகள் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் சனத்தொகைப் பரம்பலை மாற்றும் நோக்கத்துடன் குடியேற்றத் திட்டங்களை அமைத்து வருவது குறித்து மாநாடு கவலை தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கையானது அவர்கள் பிறந்த மண்ணிலேயே அவர்களைப் பலவீனப்படுத்தியதுடன், பாதுகாப்பு குறித்து அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றும், வடக்கு - கிழக்கில் அரசஆதரவுடன் இடம்பெறும் குடியேற்றங்களை உடன் நிறுத்துமாறும் மாநாடு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

தற்காலிகமான வடக்கு-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்படவேண்டும் என்றும், வடக்கிற்கும் கிழக்கிற்குமான ஒரு மாகாணசபை நிறுவப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று கூறுகிறது.

மத்திய அரசு பாதுகாப்பு, வெளியுறவு, நாணயம் குறித்த விடயத்தில் அதிகாரத்தை கொண்டதாக இருக்கும். நிலம், சட்டமும் ஒழுங்கும், பொலிஸ் ஆகிய துறைகளில் மாகாண அரசுக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்றும்,

மாகாண அரசு சுதந்திரமான நீதி பரிபாலன அமைப்பைக்கொண்டதாகவும், மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களான பாதுகாப்பு, நாணயம், வெளியுறவு ஆகிய விடயங்கள் தொடர்பான பிணக்குகளை விசாரிப்பதற்கு மத்தியிலுள்ள உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்றும்,

அடிப்படை உரிமைகள், மனிதஉரிமைகள், சட்டத்தின் முன் அனைத்துப்பிரஜைகளும் சமன் என்ற கோட்பாடு ஆகியவை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெறவேண்டும் என்றும் தீர்மானத்தில் சொல்லப்படுகிறது.

இந்திய - சிறிலங்கா நட்புறவுச் சங்கத்தின் போசகர் இளைப்பாறிய நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணஐயர், பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் பெர்னான்டஸ், வண. பி.கே. மாணிக்கம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி அதிபர், வண. திஸாபாலசூரியா, சென்னையில் சிறிலங்காவிற்கான உயர்ஸ்தானிகராக முன்பு கடமையாற்றிய பேராசிரியர் ஷெல்ற்டன் கொடிகாரா, சிறிலங்கா மெதடிஸ்த திருச்சபை முன்னாள் தலைவர் வண. சேமா பெரேரா உட்பட சிறிலங்காவிலும், இந்தியாவிலும் இருந்து பல முக்கியஸ்தர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

பார்வையாளர்களாக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான ஆலோசகர் வண. ஆர். லூட்டன், ஜெனிவாவில் உள்ள உலகத் திருச்சபைகள் கவுன்சில் செயலாளர் திருமதி எலிசபேத் சால்ட்டர், மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த ஹொங்ஹொங் பிரதிநிதி வாங் காய் சிங், சிறிலங்காவைச் சேர்ந்த பசில் பர்னான்டோ ஆகியோர் பார்வையாளராகக் கலந்து கொண்டனர்.